# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | கார்த்திகை -13 29-11-2003 | சனிக்கிழமை | ஓசை 284



காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-48A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
கைத் 077-6059672




# போர்நிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு பிரதமரால் நியமிக்கப்படும் உதவிப் பாதுகாப்பு அமைச்சர்

## பிரதமரே சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பார் மலிக் - தித்தவெல குழுவிற்கு சனாதிபதி பரிந்துரை

(கொழும்பு)

**சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவிப் பாதுகாப்பு அமைச்சர் ஒருவரை நியமிக்க சனாதிபதி சந்திரிகா பரிந்துரை செய்துள்ளார். போர்நிறுத்த உடன்பாட்டை அமுல் செய்யும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் இவர் பிரதமரால் நியமிக்கப்படுவார் எனவும் பேச்சுவார்த்தையை பிரதமரே முன்னெடுக்கவேண்டுமெனவும் சனாதிபதி மலிக்-தித்தவெல குழுவிற்கு வழங்கிய தனது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.**

சிறிலங்கா சனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான நெருக்கடி நிலைமையை தவிர்ப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள மலிக் சமரவிக்கிரம, மனோதித்தவெல குழுவிற்கு சனாதிபதி தனது பரிந்துரையை சமர்ப்பித்துள்ளார்.

நான்கு விடயங்கள் தொடர்பாக இடம்பெற்றுள்ள இந்தப் பரிந்துரைகளில் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதற்குப் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒரு உதவிப்பாதுகாப்பு அமைச்சரை நியமிக்கலாம். இதனைப் பிரதமரே நிய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிளி.மாவட்ட பொது வைத்தியசாலை கட்டட வேலைகளுக்கு நடவடிக்கை

### கிளி. அரச அதிபர் தகவல்

கிளி.மாவட்டபொது வைத்தியசாலை கட்டடவேலைகள் ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் அவர்களுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்டபொழுது தெரிவிக்கையில்,

மேற்படி வேலையின் முதலாவது கட்டமாக நெக்கோட் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கி 227.166 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளது.

இவ் வேலைத்திட்டம் 2004 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்று 2005ஆம் ஆண்டு முடிவுறவுள்ளது.

முதலாவது கட்டமாக பொது வைத்தியசாலைக்காக இருமாடிகள் கொண்ட 9கட்டடங்களும் ஒரு தனிக் கட்டடமும் அமைக்கப்படவுள்ளன.

வெளிநோயாளர் பகுதிகட்டடங்கள், பரிசோதனை அறைகள், வைத்தியஅதிகாரிகள், விசேட நிபுணர்கள் தங்கும் அறை, பற்சிகிச்சை நிலையத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதியின் யோசனைகள் ஐ.தே.கட்சியால் நிராகரிப்பு

சனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள குழுவில் ஐ.தே.கட்சி சார்பில் அங்கம் வகிக்கும் மலிக் சமரவிக்கிரம உதவிப்பாதுகாப்பு அமைச்சர் தொடர்பாக சனாதிபதி சமர்ப்பித்துள்ள திட்டயோசனைக்கு உடன்பாடு தெரிவிக்க மறுத்துள்ளதுடன் சனாதிபதி ஊடகத்துறையைத் திருப்பித் தர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் சனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்டுள்ள பிரதிப்பாதுகாப்பு அமைச்சுப் பதவிக்கும் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்களன்று சனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன. (32)

## மார்ச் மாதம்வரை இழுத்தடிப்புச் செய்து தேர்தலை நடத்துவதே சனாதிபதியின் நோக்கம்

### கொழும்பு விமர்சகர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய நல்லிணக்க அரசாங்கம் என்றும், ஜே.வி.பியுடன் கூட்டுஎன்றும் சனாதிபதி கூறிவருவது காலத்தை இழுத்தடிக்கும் நடவடிக்கை எனவும் மார்ச் மாதத்தில் பொதுத் தேர்தல்ஒன்றை நடத்துவதே அவரது நோக்கமென்றும் கொழும்பு அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேசிய நல்லிணக்க அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாகப் பேசிவருகின்றார். ஆனால் ஜே.வி.பியுடனான இணக்கப்பாடுகுறித்தும் பேச்சுக்களை நடத்திவருகிறார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் தொடரும் மழையினால் மக்கள் இடம்பெயர்வு, வீதிகள் துண்டிப்பு

(அலுவலக செய்தியாளர்)

வன்னிப் பெருநிலப்பரப்பில் தற்போது பெய்துவரும் அடைமழை காரணமாக தாழ்விடங்களிலிருந்த மக்கள் இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளிலும் பொது இடங்களிலும் தஞ்சமடைந்து வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

இதேவேளை பல பிரதான வீதிகளை மழைவெள்ளம் ஊடறுத்துப் பாய்வதன் காரணத்தினால் போக்குவரத்துக்கள் மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை பொதுமக்களும் வாகன ஓட்டிகளும் எதிர்கொள்வதனை அவதானிக்க முடிகின்றது.

நேற்றுக் காலை முதல் இரத்தினபுரம் கிளிநொச்சி வீதி, கிளிநொச்சி வட்டக்கச்சி ஐந்தடிவான் வீதி முறிப்பு-கோணாவில் வீதிகளை குறுக்கறுத்து மழைவெள்ளம் பாய்ந்ததன் காரணத்தினால் இதனூடாக மக்கள் போக்குவரத்தினை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியவண்ணம் வெள்ளத்தினூடாக பயணித்ததனை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

இரத்தினபுரம் கிராமத்தில் வீதியினை ஊடறுத்து வெள்ளம் பாய்ந்த பகுதிகளில் பொதுமக்கள் வெள்ளத்தினூடாகப் பயணிப்பதற்கான உதவிகளை காவல்து

(8 ஆம் பக்கம் பார்க்க)



## சனாதிபதி-பிரதமர் அடுத்தவாரம் சந்தித்துப் பேச்சுவார்த்தை

### சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான பேச்சுவார்த்தை அடுத்தவாரமளவில் நடைபெறும் எனவும் இதில் சனாதிபதியும் பிரதமரும் மீண்டும் கூட்டுச் சேர்ந்து சமாதானம், பொருளாதாரம் தேர்தல் சுயாதீன முறைமை போன்றவற்றை எவ்வாறு முன்னெடுத்துசெல்வது தொடர்பாக கலந்துரையாடுவார்கள் என பொ.ஐ.மு.பேச்சாளர் சரத் அமுனுகம செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்துள்ளார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை வெல்ல முடியாதென உணரும்போதே அரசுகள் பேச்சுவார்த்தைக்கு வருகின்றன

### - திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி பதுமன்

(திருமலை)

விடுதலைப்புலிகளை போர்க்களத்தில் வெல்லமுடியாது என்று எண்ணும்போதுதான் அரசாங்கங்கள் பேச்சுவார்த்தைக்கு வருகின்றன. எம் மாவீரர்களின் தியாகங்கள் தான் இதற்குக் காரணம் என்று விடுதலைப்புலிகள் திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் பதுமன் நேற்றுமுன்தினம் பிற்பகல் மூதூர் கிழக்கு, சேனையூர் மத்திய கல்லூரியில் நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் பேசும்போது தெரிவித்தார். வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையான பிரதேசம் எமது கட்டுப்பாட்டில் இருக்கிறது. இதற்குக்காரணம் மாவீரர்களின் தியாகமே என்றும் கட்டளைத் தளபதி கேணல் பதுமன் கூறினார்.

விடுதலைப்புலிகள் திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் பேசுகையில் "இன்னல்கள், இழப்புக்களுக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உடுத்துறை மாவீரர் துயிலுமில்லத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் தினநிகழ்வு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர்நாள் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றன. பொதுச் சுடரினை கடற்புலிகளின் தளபதி லெப்.கேணல் மங்களேஸ் அவர்கள் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் கல்லறைகளுக்கு பெற்றோரும் உறவினரும் சம நேரத்தில் சுடர் ஏற்றினர். வடமராட்சி கிழக்கு வேம்படியில் மாவீரர் நினைவாக அமைக்கப்பட்டபந்தலில் மாவீரர்களின் திருவுரு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பல்கட்டும் நிலையம்

குறித்த தவணையில் சிறந்த முறையில் பல் கட்டுவதற்கும், பற்களுக்கு கிளிப் போடுவதற்கும் யாழ்.சாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சியில் இயங்கிவருகிறது. வேந்தன் பல்கட்டும் நிலையம் ஆனந்தபுரம், கிளிநொச்சி. (3890)

### தவறிவிட்டது!

சுந்தரம் ஜெகநாதன் என்பவருடையதேசிய அடையாள அட்டையும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய ஐந்து சிப்பேக் 27.11.2003 அன்று முழங்காவில் துயிலும் இல்லத்திற்கு மோட்டார் சைக்கிளில் செல்லும் போது தவறிவிட்டது.இதைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் அல்லது அதில் உள்ள விலாசத்திற்கு அறியத்தரவும் சன்மானம் வழங்கப்படும்.
(3365)

### தவறிவிட்டது

கிளிநகரப் பகுதியில் NPGQ 9363இலக்கமுடைய உந்துருளிக்குரிய ஆவணங்கள், சாரதி அனுமதிப்பத்திரம், வேறு முக்கிய ஆவணங்கள் தவறி விட்டன கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து கீழ் வரும் முகவரியில் ஒப்படைக்கவும் மு.முருகையா இரணைமடு மருக்காலை155ம் கட்டை கிளிநொச்சி. (3364)

### அபிவிருத் தி சங்க பொதுச் டம்

பளை அரசின வைத்தியசாலை அபிவிருத்திச் கப் பொதுக் கூட்டம் எதிர்வ 2003.12.03 புதன்கிழமை ல் 2.00 மணிக்கு பச்சிலை ி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் என்று வைத்தியசாலை பொறு ிகாரி வைத்திய கலாநிதி திரும நடராஜன் தெரிவித்துள்ள

### க ண்டெடுப்பு

கடந்த 23/11/2003 அன்று வவுனியாப் பேருந்தில் கருணாகரன் சுபாஜினி உப்புக்குளம் மன்னார் என்ற முகவரி இடப்பட்ட நாட்குறிப்பேடு, தேசிய அடையாள அட்டை என்பன கண்டெடுக் கப்பட்டுள்ளன. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி முல்லைத்தீவு இனியவன் அழகுசாதன மாளிகையில் பெற்றுக் கொள்ளுமாறுதெரிவிக்கப்பட்டுள்ளது. (20)

## உர மானியம் சனவரியில்

வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட உர மானிய அதிகரிப்பு வரும் சனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளது.மேற்படி உர மானியம் தற்சமயம் யூரியா பசளைக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு 2004இல் ஆசிரியர்களை உள்வாங்கும் தெரிவுமுறை

இலங்கையிலுள்ள 17 தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கும் 2004ஆம் ஆண்டு மாணவர்களை உள்வாங்குதல் தொடர்பான கருமங்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. நேர்முகப் பரீட்சைகள் நடாத்துவதற்கு வேண்டிய பணிகளில் கல்லூரிகளின் பீடாதிபதிகள் ஈடுபட்டுவருகின்றனர்.வெகுவிரைவில் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகள் அழைக்கப்படவுள்ளனர்.

ஒவ்வொரு கல்லூரிகளிலுமுள்ள துறைகளுக்கு அவ்வவ் கல்லூரிகளில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் சில விசேட ஏற்பாட்டின்பெயரில் மாற்று ஒழுங்குகளும் தேவைகருதி திட்டமிடப்பட்டுள்ளன. உதாரணமாக நாடு முழுவதிலிமிருந்தும் உடற்கல்வித் துறைக்கு விண்ணப்பித்த தமிழ் சிங்கள விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை ஊவா தேசிய கல்வியியற் கல்லூரியில் செயல்முறைப் பரீட்சையுடன் நடைபெறவுள்ளது. இதற்கான இணைப்பாளராக மேற்படி கல்லூரியின் பீடாதிபதி எம்.எம். சந்திரசேகரா நியமிக்கப்பட்டுள்ளார். இதே போல யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்குரிய துறைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் நேர்முகப்பரீட்சைச் செயற்பாடு ஒரு நேர்முகப்பரீட்சைச் சபையின் கீழ் மையப்படுத்தப்பட்டுள்ளது. இச்சபையின் இணைப்பாளராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இந் நேர்முகப்பரீட்சை சபையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி கே. பேனாட் அவர்களும் மட்டக்களப்புத் தேசிய கல்வி யியற் கல்லூரிப் பீடாதிபதி எஸ். பாக்கியராசா அவர்களும் கடமையாற்றி தெரிவில் ஈடுபடுவர்.இம் மூன்று கல்வியிற் கல்லூரிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன. நேர்முகப்பரீட்சை வர்த்த மானி அறிவுறுத்தலுக் கிணங்கவே நடைபெறவேண்டும். வழக்கமாகக் கவனத்தில் கொள்ளப்படும் வயது, தகுதிநிலை, க.பொ.த.உ/த புள்ளிகள் (இந்தத் தடவைZ-Score) மற்றும் நிபந்தனைகள் இம்முறையும் கவனத்தில் கொள்ளப்படுவதுடன் 2001,2002 ஆகிய இரு ஆண்டுகளிலும் க.பொ.த.உ/தரத்தில் சித்தியடைந்தவர்கள் கல்லூரிகளுக்கு உள்வாங்கப்படவுள்ளனர். இவ்வாறு உள்வாங்கப் படும்போது குறிப்பிட்ட ஒரு துறைக்கு குறிப்பிட்ட ஒரு கல்லூரியில் அனுமதிக்கப்படவுள்ள மொத்த எண்ணிக்கையினில் 50%2001ஆம் ஆண்டில்இருந்தும் மிகுதி50%2002ஆம் ஆண்டில்இருந்தும் தெரிவுசெய்யப்படவேண்டும். அவ்வாறு எண்ணிக்கை ஆண்டுரீதியாக பிரித்தொதுக்கப்பட்டபின்னர் அந்தத் தொகையில் 50% திறமை அடிப்படையிலும் மிகுதி 50% கஷ்டப்பிரதேச அடிப்படையிலும் தெரிவு இடம்பெறவேண்டும். என்பது கல்வி மனிதவள விருத்திஅமைச்சின் கல்விக்கல்லூரிகள் சபையின் (COLLEGE of Education Board) தீர்மானமாகும்.

கஷ்டப்பிரதேச அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் மாணவர் தொகை பிரகடனப்படுத்தப்பட்ட கஷ்டப்பிரதேசங்கள் மக்கள் தொகை அடிப்படையில் கல்வி அமைச்சால் தீர்மானிக்கப்பட்டு நேர்முகப்பரீட்சைகள் குழு இணைப்பாளருக்கு அறிவிக்கப்படும் அத்தொகை அடிப்படையில் மட்டுமே கஷ்டப்பிரதேசத்துக்குரிய மாணவர்தெரிவு நடைபெறும். ஆனால் அதன் அடிப்படையில் தெரிவு செய்யப்படும்போது ஏதாவது மாவட்டங்களில் குறிப்பிட்டதொகைக்கு விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அல்லது வேறு காரணங்களால் தகுதி இல்லாதவிடத்து அவ்வெற்றிடம் திறமை அடிப்படையில் நிரப்பப்படும்.இவ்வகையாக 2004 ஆம் ஆண்டுக்கான அனுமதித் தெரிவு முறை தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது.


இவ்வாறு தெரிவு முறையானது தெளிவாக வரையறுக் கப்பட்டிருந்தாலும் 2001,2002 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் தெரிவுகள் சமமானதாக உள்ள டக்கப்பட்டுள்ளதால் விண்ணப் பதாரிகளிடத்தும் ஏனையோரிடத்தும் சில விளக்கக்குறைவுகள் ஏற்படவும் வாய்ப்புண்டு. மாணவர்கள் தெரிவு செய்யப்படும் போது துறைக்குத்துறை வெட்டுப்புள்ளிகள் வேறு படுவது பொதுவானது. திறமை அடிப்படையில் தெரிவாகும் விண்ணப்பதாரர்கள் புள்ளிக்கும் கஷ்டப்பிரதேச அடிப்படையில் தெரிவாகும் விண்ணப்பதாரர்கள் புள்ளிக்கும் வேறுபாடுகள் இருக்கும்.

ஆனால் திறமையடிப்படையில் தெரிவாகும் விண்ணப்பதாரிகள் புள்ளிகள் யாவருக்கும் குறிப்பிட்ட துறைக்கு சமமாகவிருக்க கஷ்டப் பிரதேசத்திற்குரிய புள்ளிகள் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடும் தன்மை கொண்டமையும் இவ்வடிப்படையில் ஒரு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட புள்ளி கூடுதலாக இருக்க இன்னொரு மாவட்டத்தெரிவில் குறைந்துபுள்ளி இடம்பெறலாம். திறமையடிப்படையாகவிருந்தாலும் சரி இவ்வேறுபாடு பாடத்துறைக்குத் துறை ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. கடந்த காலங்களில் இதனை தெளிவாக விளங்கிக் கொள்ள முடியாத விண்ணப்பதாரிகள் இது தொடர்பாக எம்முடன் தொடர்புகொண்டு அல்லது கௌரவ பாராளுமன்ற அங்கத்தவர்களிடம் முறையிட்டு எங்களைவிடக் குறைந்த புள்ளிகள் உள்ளவர்களை அனுமதிக்கிறார்கள் எனக்குக்கூடியபுள்ளி உண்டு. எம்மை எடுக்கவில்லையென்று குற்றம் சாட்டியிருக்கிறார்கள். நாமும் அவர்கள் விபரத்தைப் பெற்று எம்மிடமுள்ள பட்டியல்களுடன் பரிசீலித்துப் பார்க்கும் போது அவர்கள் வேறு துறைசார்ந்தவர்களாகவோ அல்லது வேறு மாவட்டங்களைச் சார்ந்தவர்களாகவோயிருந்திருக்கின்ற நிலையினைக் கண்டிருக்கின்றோம்.

**கலாநிதி கமலநாதன் (பீடாதிபதி- யா. தே.க.க.)**

இதற்கு மேலாக இந்தத் தடவையும் 2001,2002 ஆண்டுகளில் 50% என்ற அடிப்படையில் தெரிவுகள்நடைபெறும் போது மேலும் பல விளக்கச்சிக்கல்கள் ஏற்படவாய்ப் புண்டு. எவ்வாறெனின் மேற்கூறிய அடிப்படையில் 2001 ஆம் ஆண்டு 50% மும் 2002 ஆம் ஆண்டில் 50% மும் குறிப்பிட்ட ஒரு துறைக் குத் தெரிவாகும் போது குறிப்பிட்ட ஒரு ஆண்டின் வெட்டுப்புள்ளி கூடுதலாகவும் மற்றைய ஆண்டின் வெட்டுப்புள்ளி குறைவாகவும் அமையலாம். இச் சந்தர்ப்பத்தில் இரண்டு வேறுபட்ட வெட்டுப் புள்ளிகளுடன் ஒரு துறையில் மாணவர்கள் உள்வாங் கப்பட்டிருப்பர். இந்நிலையில் முதலாவதாகச் சொல்லப்பட்ட கூடிய வெட்டுப்புள்ளியைக் கொண்ட ஆண்டில் சித்தியடைந்த அவ்வெட்டுப் புள்ளிக்கு அடுத்ததாக உள்ள மாணவரின் புள்ளி குறைந்த வெட்டுப் புள்ளியைக் கொண்ட ஆண்டின் விண்ணப்பதாரி பெற்ற புள்ளியை விட கூடியதாகவிருக்கலாம். ஆனால் அனுமதி கிடைத்திருக்க லாம். தெரிவு முறையில் விளக்க மின்மையிருப் பின் கூடிய புள்ளி பெற்றும் தனக்கு அனுமதி கிடைக் கவில்லையென ஆதங்கப் படலாம். எனவே விண்ணப்பதாரிகள் தெரிவு முறையைத் தெளிவாக விளங்கி கொள்ளல் சிறப்பானது. மேற்கூறிய முறையிலேயே தெரிவுகள் நடை பெறவுள்ளன. மேலும் விளக்கம் தேவையானவர்கள் அவ்வவ் கல்லூரிப் பீடாதிபதிகளுடன் தொடர்பு கொண்டு சந்தேகங்களை நீக்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

### தேசிய கல்வியியற் கல்லூரிக்கான அனுமதி முறை - 2004




# கல்வியியல் கல்லூரி அனுமதி-2004 நேர்முகப் பரீட்சைக்கு தெரிவானோர்

கல்வியற்கல்லூரி அனுமதி 2004 நேர்முகப்பரீட்சைக்கு தெரிவானோரில் வன்னிப்பிரதேச விண்ணப்பதாரிகள் விபரம்.

**தமிழ்**

பா.ராதிகா-விசுவமடுமேற்கு, க.பாமினி- முள்ளியவளை, மோ.கிருஸ்ணதேவி-கணேசபுரம், வீ.சந்திரமோகன்- காதர் சின்னக்குளம்.வவு, மு.ஜெயகௌரி-மகாரமபைக்குளம், இ.பிரசாத்- இராமநாதபுரம்,கிளி.து.விஜிதா- சாஸ்திரிகூளாங்குளம், நா.ஜெயலலிதா-பூநகரி, அ.கிருத்திகா-குட்செட்றோட் வவுனியா, ஐ.லோகேஸ்வரி- மல்லாவி, செ.பானுகரன்-மன்னார், சி.சிறீதரன்-அளம்பில், வ.ஜெயகாந் -வற்றாப்பளை, இ.சந்திரகுமார் - காரைக்குடா, ஜே.ஸ்டெலா டிலானி-முருங்கன், பா.பாலரஜனி- முழங்காவில், ரா.இதயபாஸ்- முல்லைத்தீவு, பா.மஞ்சுளா-மன்னார், ம.சசிகலாதேவி- துணுக்காய்,ரா.சச்சிநாதன்-முருங்கன், ஜோ.கார்த்திகா-கண்டிவீதி வவுனியா,க.சத்தியமாலா முல்லைத்தீவு த.கௌரி-கனகபுரம், ந.தவரூபன்- உருத்திரபுரம்,க.கவிதா- பூவரசங்குளம், ச.நவனீதமோகன்- புதுக்குடியிருப்பு,

**கணிதம்**

ச.மோகன்ராஜ்- உடையார்கட்டு, ம.பிரமிளா -முள்ளியவளை, க.திலீபன்-தோணிக்கல்,சி.இளந்டிதிவாகர்-வட்டக்கச்சி, ம.சுஜீதா-விசுவமடு, ஜே.ரூபன் ரொனிசில்வா-பேசாலை, த.பிரதீப்-இயக்கச்சி க.பாமினி- பட்டாளிச்சியூர், வவு.ஜோ.சுசீலன் கிளிநொச்சி, ஜெ.ருஜித்திரா- முள்ளியவளை, க.கபிலன்- எழுதூர் மன்னார், சி.சிறீகரன் - முல்லைத்தீவு, ம.கிருஸ்ணகாந் -முள்ளியவளை.

**சமூகக்கல்வி**

க.துட்சாயினி-கண்டிவீதி வவுனியா, ச.ராஜயோகினி- கள்ளப்பாடு,முல்லைத்தீவு, க.சுரேஸ்பாபா-முல்லைத்தீவு, சோ.அபிராமி-புளியங்குளம், சோ.ஜனகன்- தோணிக்கல், பா.மஞ்சுளா-மன்னார், இ.சச்சிநாதன்- முருங்கன், யோ.துஷ்யந்தன்- ஒட்டுசுட்டான், ச.விஜிதா-ஒட்டுசுட்டான், ச.சசிலா-யோகபுரம், ஞா.மயூரன்- முல்லைத்தீவு, சி.பானுசா- முள்ளியவளை, அ.நந்தினி- புதுக்குடியிப்பு , வீ.சந்திரமோகன் - காதர் சின்னக்குளம்வவு,சா.சிவாநந்தன்-வீரபுரம், நேரியகுளம், ரா.பிரசாத்-இராமநாதபுரம், பி. ஜெகதாம்பாள்-வட்டக்கச்சி, ஜே.ஸ்டெலா டிலானி-முருங்கன்,

**விஞ்ஞானம்**

க.கஜேந்திரன்-உக்கிளாங்குளம், க.தீபனா-கணுக்கேணி கிழக்கு, மோ.மாதிரன்-யோகபுரம், கு.குமாரதி-கண்டிவீதி,வவுனியா, இ.மேனகா-வவுனியா,ம.கார்த்திகா-உக்கிளாங்குளம் சி.நிரஞ்சா ஒட்டுசுட்டான், சி.கவிந்தன்-வேலணை, ஓ.தனுசியா-தேணிக்கல், ச.சுதர்சினி-இளவாலை, ம.ரவீந்திரகுமார்-ஜெயபுரம் வடக்கு, ரா.சிவனேஸ்வரன்-வட்டக்கண்டல், ப.நிசாந்தினி-விசுவமடு, அ.ஒகஸ்டின் தேவராஜ-பள்ளி முனை, செ.சுதர்சன்-விசுவமடு, யூ.மேரி பிரட்ரிக்கா-வங்காலை, கு.நிசாந்தினி-திருநெல்வேலி, ரா.கவின்யா-யாழ்ப்பாணம், செ.நித்தியா-மாதகல், அ.திரேசாசின்னமலர்-முருங்கன், ர.தர்சினி-பசார்வீதி வவுனியா, ச.ரஜினி-பண்டாரிக்குளம், ச.கார்த்திகா-ரம்பைக்குளம், ப.கிரிசாந்தி-பசார்வீதி வவு, இ.கேமா-விசுவமடு, கு.குணவித்யா-பளை, கா.நிர்ஜனன் -புலோப்பளை, க.கலாரூபி-பண்டாரிக்குளம், நா.சுதீஸ்கரன்-உருத்திரபுரம், ம.சர்மினி-மில்றோட்வவு, ந.கோபீதா-உக்கிளாங்குளம், சி.சுடர்விழி-விசுவமடு, செ.நிர்மலிகுறூஸ்-பேசாலை, ஜே.அன்ரன்ஸ்டீபன்-மதகுவைத்தகுளம், ய.மயூரன்-சாவகாடு, ஜே.ரூபன்ரோனி சில்வா-பேசாலை,

(தொடரும்...)

# ஈராக் குறித்த திட்டவரைவு பற்றி முடிவெடுக்க முடியாத நிலையில் அமெரிக்கா

(வாஷிங்டன்)


**ஈராக் தொடர்பாக ஐ.நா சபையில் திட்ட வரைவு ஒன்றை சமர்ப்பிப்பது பற்றி அமெரிக்கா நேரடியான தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள முடியாமல் இருப்பதாக இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.**

அமெரிக்கா தலைமையில் தெரிவு செய்யப்பட்ட ஈராக்கிய நிர்வாக சபையின் தலைவர் கடந்த திங்கட்கிழமை பாதுகாப்புச் சபைக்கு கடிதம் ஒன்றை சமர்ப்பித்திருந்தார்.

ஈராக்கின் கிளர்ச் குறித்த திட்டத்தை உள்ளடக்கிய தீர்மானத்தை நிறைவேற்றுமாறு அவர் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மார்ச் மாதத்தில் இதற்கான பணிகளை தொடங்குமாறு ஈராக்கிய நிர்வாக சபையின் பதில் தலைவர் கூறியிருந்தார். ஆனால அமெரிக்காவும், பிரிட்டனும் புதிய அரசியல் யாப்பை உருவாக்கி 2005 ஆம் ஆண்டளவில் சமஷ்டி அரசாங்கத்தை தெரிவு செய்யும் நிகழ்ச்சி நிரலை ஏற்கும் தீர்மானத்தை வடிவமைக்கவில்லையென தெரிய வருகிறது.

இப்புதிய திட்டம் குறித்து ஆராயும் நிலையில் அமெரிக்க சனாதிபதியின் நிர்வாகம் இல்லையென இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.



நியூயோர்க் – லண்டனுக்கிடையில் கடைசியாக அக்டோபர் 24 ஆம் திகதியன்று பறந்த பிரிட்டிஷ் எயார்வேஸ் விமானம் தனது சேவையை நிறுத்திக்கொண்டது. இவ்விமானம் அமெரிக்க நகரான ஹட்சனில் உள்ள அருங்காட்சியகத்துப் படகில் கொண்டு செல்லப்படுகிறது.

# அமெ.சனாதிபதி ஈராக்கிற்கு விஜயம்

(பாக்தாத்)

அமெரிக்க சனாதிபதி புஷ் ஈராக்கிற்கு விஜயம் செய்துள்ளார்.

இவர் அங்கு நிலை கொண்டுள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் படைகளை உஷார் நிலைப்படுத்துவதற்காக திடீரென விஜயம் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஈராக்கில் இருக்கின்ற அமெரிக்கப் படையினர் ஈராக்கியர்களின் தாக்குதல்களினால் அண்மையில் பெரும் இழப்புக்களைச் சந்தித்து வருகின்றமை தெரிந்ததே.

# தலிபானுக்கு ஆதரவு தெரிவித்த இரு அமெரிக்கருக்கு சிறைத்தண்டனை

## -அமெரிக்க நீதிமன்று விதித்தது

(லண்டன்)


தலிபான் அமைப்பில் சேரும் நோக்கில் ஆப்கானிஸ்தானுக்குச் செல்ல முயன்ற இரண்டு அமெரிக்க முஸ்லிம்களுக்கு 18 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு எதிராகப் போரிட சதி செய்வதாக பேட்டிஸ் லுமும்மா போர்டு (32), ஜெப்ரி லியோன் (33) ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

அமெரிக்காவில் இருந்து சீனாவுக்குச் சென்ற பேட்ரிஸ் லுமும்மா அங்கிருந்து ஆப்கானிஸ்தான் செல்லமுயன்ற போது கைது செய்யப்பட்டார்.

இருவர் மீதும் அமெரிக்காவில் போர்ட்லேண்ட் நகர நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. முஸ்லிம் சகோதரர்களைக் காக்கும் நோக்கத்தில் ஆப்கானிஸ்தானுக்குச் செல்ல முயன்றதாக அவர்கள் கூறினர். ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்திய அமெரிக்க அதிபர் புஷ்ஷின் கொள்கையை நான் எதிர்க்கிறேன் என்று பேட்ரிஸ் கூறினார்.

நீங்கள் முஸ்லிம்களின் பிரதிநிதிகள் அல்ல. முஸ்லிம் மதத்தை நீங்கள் இழிவுபடுத்துகிறீர்கள் என்று அமெரிக்க நீதிபதி ராபர்ட் இ.ஜோன்ஸ் கூறினார். இருவருக்கும் 18 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தா



ரஷ்யாவின் பெற்றிஸ் லுமும்பா பல்கலைக்கழகத்தில் தீயினால் எரிந்து போன விடுதியைத் தீயணைப்பு வீரர் ஒருவர் பார்வையிடுகிறார். இவ்விபத்தில் 32 வெளிநாட்டு மாணவர்கள் பலியாகியது தெரிந்ததே.

# அரசியல் யாப்பு மாற்றத்திற்கான கருத்துக்கணிப்பிற்கு ஏற்பாடு

## தாய்வான் பாராளுமன்றம் அங்கீகாரம்

(தாய்பேய்)

அரசியல் யாப்பு மாற்றங்களும் அனுமதி அளிக்கும் கருத்துக் கணிப்பு க்களை நடத்தக் கூடிய பிரேரணை ஒன்று தாய்வான் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அறிமுகப்படுத்தப்பட்டதை விட கடுமை குறைந்த சரத்துக்களை பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கீகரித்துள்ளனர். சீனா மிக கவனமாக கவனித்து வரும் இப்பிரேரணை தொடர்பாக ஆளும் எதிர்கட்சி உறுப்பினர்களுக்கு மத்தியில் காரசாரமான விவாதம் இடம் பெற்றுள்ளது.

# சுதந்திர வேட்கையின் ஆவேசத்தை பிரிட்டன் புரிந்து கொள்ளவேண்டும்

## -பாக்.இன் முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான்கான்

(லண்டன்)

தலைமைத்துவத்திற்கான தகுதிகளெதுவும் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்சிடம் கிடையாது என முழுநேர அரசியல்வாதியாக மாறியுள்ள பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான்கான் லண்டனில் தெரிவித்துள்ளார்.

லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில்கடந்த செவ்வாய்க்கிழமை உரையாற்றிய இம்ரான் மேலும் குறிப்பிட்டதாவது,

இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்ததைவிட உலகில் இன்று பயங்கரவாதம் அதிகரித்துள்ளது. செப்ரெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்கா தாக்கப்பட்டமை தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள பதில் நடவடிக்கைகள் பிழையானதாகும் புஷ்சின் இச் செயற்பாடுகளுக்கு பிரிட்டிஷ் பிரதமர் உதவுவது எமக்கு வியப்பைத் தருகின்றது. பிரிட்டன் வரலாற்றிலிருந்து பாடம் படிக்க வேண்டும். சுதந்திர வேட்கையின் ஆவேசத்தைப் பிரிட்டிஷ் உணர்ந்து கொள்ளல் வேண்டும். உலக விவகாரங்களில பிரிட்டனின் கொள்கை மேலும் சீர் பெறல் வேண்டும் என்றார்.



இஸ்ரேல் சோதனைச்சாவடியில் இஸ்ரேலிய வீரரும் பலஸ்தீனர் ஒருவரும் தர்க்கத்தில் ஈடுபடுவதை இஸ்ரேலிய தொண்டர் ஒருவர் பார்வையிடுகிறார். இஸ்ரேலிய வீரர்களைக் கண்காணித்து பலஸ்தீனர்களுடன் எவ்வாறு நடந்துகொள்வது என்பதை அவர்களுக்குச் சொல்லித் தருவதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் 200 பேரில் இவரும் ஒருவர்.

# இந்தியாவிற்கு ஐ.ஒன்றியம் 10 கோடி ரூபா உதவி

(சென்னை)

இந்தியாவின் நீண்ட கால வளர்ச்சித்திட்ட பணிகளுக்கு இந்திய நாணயப்படி ஐரோப்பிய யூனியன் 10 ஆயிரம் கோடி ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளதாக அதன் வெளியுறவுத்துறை ஆணையாளர் கிறிஸ் பெட்டன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் தமிழகத்திற்கு விஜயம் செய்தபோதே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க. அரசிற்கெதிராக சென்னையில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

தமிழ்நாட்டில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதற்காக பணி நீக்கம் செய்யப்பட்ட 587 ஊழியர்களையும் மீண்டும் அவரவர் பணிகளில் நியமிக்க வேண்டுமென வலியுறுத்தி இந்திய கம்யூனிட் கட்சியினர் நேற்று முன்தினம் மாநிலத்தில் சென்னை உட்பட அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

சென்னையில் கட்சியின் மாநில செயலாளர் நல்லக்கண்ணு தலைமையில் இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்.தொழில்கட்சியின் தலைவர் ராஜினாமா

அவுஸ்ரேலிய எதிர்க்கட்சித் தலைவர் ராஜினாமா செய்துள்ளார். கடந்த இரண்டு ஆண்டுகளாக தொழிற்கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்த இவர் தனது சகாக்களின் ஆதரவை இழந்தமையால் இம்முடிவை எடுத்துள்ளார். ஏழு வருடங்களுக்கு முன்னர் ஆட்சிப் பீடத்திலிருந்து இறங்கிய தொழில்கட்சி ஒரு வருட காலத்தில் நடைபெறவுள்ள தேர்தலில் தோல்வி ஏற்படலாம் என்ற அச்சமே இதற்குக் காரணமாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

தேசிய பாராளுமன்றத்தில் 92 உறுப்பினர்களைக் கொண்ட எதிர்க்கட்சி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தமது புதிய தலைவரை தெரிவு செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யசீர் அரபாத்திற்கான ஆதரவு நீடிக்குமென ரஷ்யா அறிவிப்பு

(மொஸ்லோ)

பலஸ்தீன தலைவர் யாஸீர் அரபாத்துக்குத் தனது ஆதரவு நீடிக்கும் என்று ரஷ்யா உறுதிப்படுத்தியுள்ளது.

அமெரிக்கா இஸ்ரேலின் நிலைக்கு மாறான இந்த முடிவு மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

அரபாத்தைப் பலஸ்தீனத் தலைவராக ரஷ்யா தொடர்ந்து அங்கீகாரம் செய்து வரும். பலஸ்தீன மக்களின் சட்டரீதியான தலைவராக அவர் நீடிக்கும் வரை அவருடன் பேச்சு நடத்துவோம் என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் இவனோவ் அல்-ஜஸீரா தொலைக்காட்சிக்கு கடந்த திங்கட்கிழமை அளித்துள்ள பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல்-பலஸ்தீனம் இடையிலான மோதல் போக்கு விரைவில் முடிவுக்கு வரவேண்டும் என்று ரஷ்யா விரும்புகிறது. அரபாத்துக்கான ஆதரவை விலக்கிக்கொள்ளும் சூழ்நிலை எதுவும் இப்போது எழவில்லை.

நடைமுறையில் இருந்து வரும் ஒப்பந்தங்கள் அடிப்படையில் இஸ்ரேல்-பலஸ்தீனம் இடையே பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும். இருதரப்பினரிடையே பதற்றம் நீடிப்பதை ரஷ்யா விரும்பவில்லை. பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் குற்றம் சாட்டிக் கொள்வதை விடுத்து அமைதிக்கு இருதரப்பினரும் வழிகாண முன்வரவேண்டும்- வன்முறையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்.

இஸ்ரேல்பலஸ்தீனம் இடையே ஒப்பந்தங்கள் ஏற்படுகின்றன. ஆனால், அவற்றின் அமுலாக்கத்தைக் காண முடியாத நிலை உள்ளது. பேச்சுவார்த்தைக்கு ஒவ்வொரு முறையும் புதிய தலைவர்கள் வந்தால் அவர்கள் புதிய நிலைப்பாடு எடுக்கவே வழிவகுக்கும் என்றார் இவனோவ்.

# பாதுகாப்புக்கென புதிய விண்கலம் 'Soft Wall' அமெரிக்கா கண்டுபிடிப்பு





அமெரிக்காவில் பென்டகன் மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து விமானங்கள் மூலம் நடத்தப்படும் தற்கொலைத் தாக்குதல்களைத் தடுக்க அமெரிக்கா புதிய விண் கலம் ஒன்றைத் தயாரிக்கும் ஆய் வினை மேற்கொண்டுள்ளது. பெருமள விலான உயிர்களையும் உடைமை களையும் அழித்து உலகையே அதிர்ச்சிக் குள்ளாக்கிய இவ்வகைத் தாக்குதல்களைத் தடுக்க வழியில் லையா? என்பது குறித்து கவனம் செலுத்திய அமெரிக்க அதிகாரிகள் இவ்வாறான அனுமதியற்ற விமானங்கள் தமது பாதுகாப்புப் பிரதேசத்துள் நுழைந்து நடத்தும் தாக்குதல்களைத் தடுக்கும் இவ்வாறான ஊடுருவல்களையும், தாக்குதல்களையும் தடுக்கும் விதத் தில் அமெரிக்கப் பாதுகாப்பு அதிகா ரிகள் முன்னர் கூறியது போல் அதி வழிகளை கண்டறிந் துள்ளனர். நவீன தொழிநுட்ப முறைகளின் உதவியுடன் கூடிய உபகரணம் ஒன்றை அவர்கள் தயாரித்து ஆய்வை மேற்கொண் டுள்ளனர்.

இதற்கிடையில் அண்மையில் மீண்டும் ஒரு மர்ம விமானம் ஒன்று வாஷைடன் பாதுகாப்பு வலயத்தை ஊடறுக்க முயன்றுள்ளதால் மீண் டும் அதிகாரிகள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது.

வாஷிங்டன் மாநகரம் இரு பெரும் விமானப்படையுடன் கூடிய பாதுகாப்பு எல்லைகளைக் கொண் டிருக்கிறது. ஒன்று நகருக்கு 37 கி.மீ தொலைவிலுள்ளது. மற்றை யது அதிலிருந்து 10 கிலோ மீற்றர் குறைவான அதாவது 27கி.மீற்றரில் அமைந்துள்ளது.


இவற்றையும் மீறி மர்ம விமானம் ஒன்று நகரை ஊடுருவ முயற்சி செய்துள்ளது. எனினும் பாதுகாப்புப் பிரிவினதும், புல னாய்வுத் துறையினதும் நட வடிக்கைகளால இது தடுக்கப் பட்டது.

நவீன தொழிநுட்பத்திறன் கொண்ட விண்கலம் ஒன்றை உருவாக்கி யுள்ளனர்.

இவ்விண்கலம் "Soft walls" "சொப்ட் வால்ஸ்" னெப்படுகிறது. இது முற்றிலும் கணினி மயமானது. இதன செயற்பாடுகள், இயக்கம் என்பன புவியோடு தொடர்புபட்டிருக்கும். இது வானில சஞ்சரிக்கும் போது பாது காப்பு வலயம் தொடர்பாக எச் சரிக்கை நிலையிலிருக்கும். அத்து டன் அவ்வப்போது தகவல்களைப் புவிக்கு அதாவது அமெரிக்கப் பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டு அறைக்கு அறிவிக்கும். திடீரென அனுமதியின்றி எச்சரிக்கைகளை யும் மீறி விமானங்கள் மேற்படிப் பாதுகாப்பு வலயத்தினுள் பிரவே சிக்க முற்படின் குறித்த விமானத் தைப் பாதுகாப்பு வலயத்திலிருந்து பின்நோக்கி நகர்த்தும் திறனைக் கொண்டுள்ளது. இவ்வாறு மென்மை யான தடையையும் மீறி மர்ம விமானங்கள் ஊடுருவுமாயின் 'சொப்ட் வால்ஸ்' கலம் கோபம் கொண்டு தமது காந்த சக்தியை வெளிப்படுத்தி எதிரிவிமானத்தை அப்புறப்படுத்தும்.

கலிபோனிய பல்கலைக்கழகத் திலுள்ள தொழி நுட்பவியல் குழு வினரின் முயற் சியில் இக்கலம் தயாரிக்கப்பட்டுள் ளது. இதன் கண்களில் மண் ணைத் தூவி விட்டு எந்தவித வானூர்தியும் விமானப் படைத்தளப் பாதுகாப்பு வலயத்துள் புக முடி யாது என அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# MICRO WAVE OVAN நுண்ணலை அடுப்பு



மைக்ரோவேவ் எனப்படும் நுண்ணலை அடுப்பு ஒரு தற்செயலான, விந்தையான கண்டுபிடிப்பு. 1945 ஆம் ஆண்டு பெர்சி ஸ்பென்சர் (Percy Spencer) என்ற அமெரிக்க விஞ்ஞானி ஆய்வினை மேற்கொண்ட போது தற்செயலாக ஒரு சாக்லேட் கட்டியை ராடார் வெற்றிடக் குழாயின் அருகில் வைத்துவிட்டு வேறு வேலையாகச் சென்றுவிட்டார். சிறிது நேரம் சென்று வந்து பார்த்த போது அந்தச் சாக்லேட் கட்டி உருகியிருந்ததைக் கண்டார்.

வியப்படைந்த ஸ்பென்சர் இக்காரணத்தை அறிய வெற்றிடக் குழாயின் அருகில் சோழத்தை வைத்துப் பரிசோதித்தார். சிறிது நேரத்தின் பின் அவை பொரிந் தன. இப்பரிசோதனையின் மூலம், நுண்ணலைகள் மூலம் வெப்பத்தைப் பெறலாம் என இஸ்பென்சர் கண்டறிந் தார். அன்றுதான் சமையல் உலகிற்கு ஓர் உன்னத படைப்பு அறிமுகமானது! ஒரு சுவிட்சை இயக்குவதன் மூலம் நுண்ணலை அடுப்பிற்கு மின் இணைப்புக் கொடுத்தால் மேக்னட்ரான் 2,450 மெகாஹேர்ட்ஸில் (MHZ) நுண்ணலைகளை உண்டாக்கும். இவ்வலை களை நுண்ணலைப்பரப்பியின் அலகுகள் (blades) சுழன்று,அடுப்பினுள் சமமாகப் பரவச் செய்யும்.

உணவுப் பொருளிலுள்ள ஈரம் நுண்ணலைகளை உறிஞ்சி வெப்பமாக மாற்றும், இவ்வெப்பத்தினால் உணவுப் பொருட்கள் வெந்துபோகின்றன. சாதாரணமாக நாம் சமைக் கும் போது சமைக்க வேண்டிய உணவுப் பொருளை ஒரு பாத்திரத்தில் வைத்து அதை அடுப்பில் ஏற்றிச் சூடாக்கு வோம். இம்முறையில் பாத்திரம் முதலில் சூடாகி, பின் சமைக்க வேண்டிய உணவுப் பொருள் சூடாகும். இதனால் பாத்திரத்தைச் சூடாக்க வெப்பம் வீணாகச் செலவழிகிறது.

நுண்ணலை அடுப்பில் சமைக்க வேண்டிய உணவுப் பொருட்களை பீங்கான் கண்ணாடி, காகிதம்,அட்டை பெட்டி (card-board) ஆகியவற்றால் ஆன பாத்திரங்களைப் பயன்படுத்திச் சமைத்தால் மேற்கூறிய பாத்திரங்கள் சூடாகாமல் பாத்திரத்தினுள் வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருள் மட்டுமே சூடாகும். ஏனெனில், நுண்ணலைகள் இவற்றினுள் ஊடுருவிச் செல்லும். இவற்றைச் சூடுபடுத் தாது! இதனால் இம்முறையில் பாத்திரத்தைச் சூடாக்க வெப்பம் வீணாக்கப்படுவதில்லை.

உலோகத்தாலான பாத்திரங்களை நுண்ணலை அடுப் பில் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில், உலோகங்கள் நுண்ணலைகளைக் கடத்தாது. நுண்ணலை அடுப்பில் இருந்து மைக்ரோ அலைக் கசிவு ஏற்பட்டால் அது தலைவலி எளிதில் சினம் கொள்ளும் தன்மை கண்ணின் விழிவெண்படலம் பாதிப்பு,மறதி,சோர்வு போன்ற விளை வுகளை ஏற்படுத்தலாம் என 10 வருடங்களிற்கு முன்னர் ரஷ்யாவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்விலிருந்து தெரிய வந்தது. ஆனால், இப்போது கசிவு தடுப்பு வசதி களுடன் நுண்ணலை அடுப்புக்கள் வந்துவிட்டன. இதில் குறைந்த நேரத்தில் சமைத்துவிடலாம். பாத்திரம் கரி பிடிக்காது. அடுப்பைச் சுற்றியும், பாத்திரத்தைச் சுற்றியும் எண்ணெய்ப்பதார்த்தங்கள் சிந்திச் சிதறி இருக்காது. ஆனால், கொழுப்புப் பொருட்களைச் சமைக்க இது ஏற்றதல்ல. ஏனெ னில் கொழுப்புப் பொருள் சிதறிவிடக் கூடிய வாய்ப்புண்டு.


## நவரத்தினங்கள்

| எண் | கிரகம் | இரத்தினம் | வர்ணம் |
|---|---|---|---|
| 1 | சூரியன் | மாணிக்கம் (Ruby) | சிவப்பு |
| 2 | சந்திரன் | முத்து (Pearl) | வெள்ளை |
| 3 | வியாழன் | புஷ்பராகம் (Topaz) | மஞ்சள் |
| 4 | ராகு | கோமேதகம் (Sardonyx) | கருஞ்சிவப்பு |
| 5 | புதன் | மரகதம் (Emerald) | பச்சை |
| 6 | சுக்கிரன் | வைரம் (Diamond) | பளிங்கு |
| 7 | கேது | வைடூரியம் (Lapis lazuli) | பலவர்ணம் |
| 8 | சனி | நீலம் (Sapphire) | நீலம் |
| 9 | செவ்வாய் | பவளம் (Coral) | சிவப்பு |

# இறந்துவரும் சாக்கடல்

உலகின் மிகப் பெரிய அதிசயங்களில் சாக்கடலும் ஒன்று. இதன் விசேஷம் இதில் உப்பு நீரின் அளவு மிக அதிகம். இக்கடலில் குளிப்பவர்கள் நீரில் மூழ்கமாட்டார்கள். உப்பின் அடர்த்தியால் நீரில் மிதப்பார்கள். மேலும் இந்நீரில் குளிப்பதன் மூலம் பல நோய்கள் குணமாகிறது என நம்பப்படுகிறது. உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் சாக்கடலைக் காணவும் குளிக்கவுமென உலகெங்கும் இருந்து ஆயிரக்கணக்கான உல்லாசப் பயணிகள் சாக்கடலை நோக்கி வரு கிறார்கள். ஆனால் இந்த அற்புதமான இடம் இப்போது மெல்ல மெல்ல இறந்து வருகிறது.

Dead Sea என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் சாக்கடலில் காணப்படும்



உப்பின் அளவு காரணமாக இக்கடலில் உயிரினங்கள் எதுமே வாழ்வதில்லை. அதனால்தான் சாக்கடல் என்று பெயர். உண்மையில் இது ஒரு கடலே அல்ல. மலை சூழ்ந்த இடத்தில் அமைந்துள்ள ஒரு ஏரி. இதனால் மலைப்பகுதிகளில் உள்ள உப்பு பல்லாயிக்கணக்கான வருடங்களாகக் கரைந்து இதில் வந்து சேர்ந்துள்ளதால் இதன் உப்பு அடர்த்தி அதிகமாக உள்ளது. சாக்கடலுக்கு அவ்வப்போது பெய்யும் மழை நீரும், வடக்கில் இருந்து வரும் ஜோர்தான் நதி நீரும்தான் தண்ணீரை அளிக்கின்றன. ஆனால், கடந்த ஐந்து வருடகால வரட்சியும், இஸ்ரேலும், ஜோர்தானும் ஜோர்தான் நதி நீரை மறித்து விவசாயத் துக்காகப் பயன்படுத்துவது அதிகரித்து வருவதாலும் போதிய தண்ணீர் சாக்கடலுக்குக் கிடைக்காமல் போகவே சாக்கடல் தற்போது கொஞ்சம் கொஞ்சமாகச் சிறுத்து வருகிறது. 20 வருடங்களுக்கு முன்னர் தண்ணீர்ப் பிரதேசமாக இருந்த சுமார் 600மீற்றர் பகுதி தற்போது வரண்ட நிலமாகக் காட்சியளிக்கின்றது. இப்படியே போனால் சாக்கடல் முற்றிலும் செத்து விடும் என்கிறார்கள் இஸ்ரேலிய சூழல் ஆய்வாளர்கள். அவர்களின் ஆய்வின்படி சாக்கடல் வருடத்துக்கு ஒரு மீற்றர் என்கிற அளவில் வற்றிவருகிறதாம்.

பொறியியலாளர்களின் திட்டங்களின் பிரகாரம் நடந்துகொண்டால் சாக்கடலைக் காப்பாற்றலாம் எனச் சொல்லும் இஸ்ரேல் சூழல் பாதுகாப்பு அமைச்சர் இதற்கான திட்டவரைவை இஸ்ரேல் அமைச்சரவை பரிசீலனைக் காகச் சமர்ப்பித்திருப்பதாகச் சொல்கிறார்.

சாக்கடல் கடல் மட்டத்தில் இருந்து 400 மீற்றர் தாழ்வாக அமைந்திருக் கிறது. எனவே, அக்கபா வளைகுடாவில் இருந்து செங்கடல் நீரைக் கொண்டு வந்து சாக்கடலுக்குப் பாய்ச்சலாம் என்று ஒரு யோசனை கூறப்பட்டுள்ளது

# வீடியோ நிகழ்ச்சிகளை சேமிக்கக் கூடிய புதிய கையடக்கத் தொலை பேசி

இன்று உலக சந்தைகளில் அறிமுகமாகும் புதிய தயாரிப்புக்களில் நடமாடும் தொலை பேசி (செல்போன்)பிரதான பங்கை வகிக்கிறது. இதன் போது ஏற்படும் போட்டிகளினால் புதிய புதிய வடிவங்களிலும், வசதிகளோடும் இவை நாளுக்கு நாள் வேறுபடுகின்றன.

அதன்படி அண்மையில் ஜப்பான் நிறுவனம் ஒன்று வர்ணத் திரையைக் கொண்ட நவீன செல்லிடத் தொலைபேசி ஒன்றை சந்தைக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறது.

உலகில் உள்ள தொலைபேசித் தயாரிப்பு நிறுவனங்களில் 5 வது இடத்தை வகிக்கும் இந்நிறுவனம் p.900 எனப் பெயரிடப்பட்டுள்ள இத் தொலை பேசி மிகக் குறுகிய வேகத்தில் செயற்படும் பல நோக்கு தொலைபேசியாகும்.

சிறிய வீடியோ நிகழ்ச்சிகளைத் தயாரித்து சேமித்து




வைக்கக்கூடியவாறு இது அமைக்கப்பட்டுள்ளது.

சாதாரண தொலைபேசிகளுக்கான விலையை விட சற்று அதிகமான விலையை உடைய இது ஐரோப்பிய, ஆசிய, பசுபிக் நாடுகளில் இவ்வருட பிற்பகுதியில் சந்தைப்படுத்த சோனி-எரிக்சன் எனும் இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

# துருக்கி

ஐரோப்பாவிலும் ஆசியாவிலுமாக அமைந்துள்ள ஒரு மத்திய கிழக்கு நாடு. 1922 இல் ஒட்டமான் சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்குப் பின் 1923 இல் துருக்கிய குடியரசு உருவானது.

* தலைநகர் :-அங்காரா
* பரப்பு :-779000 சதுர கிலோ மீற்றர்
* மொழி :-துர்கிஷ், குர்திஷ்,அரபி
* சமயம் :-இஸ்லாம்
* நாணயம் :-துருக்கிய லிரா
* முக்கிய உற்பத்திகள் :-பார்லி,பருத்தி,பழங்கள், உருளைக்கிழங்கு, கோதுமை,உரம்,இரும்புப் பொருட்கள்,காகிதம்,உலர் திராட்சை உற்பத்தியில் உலகளவில் இரண்டாமிடம்.
* முக்கிய நகரங்கள் :-அங்காரா,இஸ்தான்புல்,இஸ்மீர்,அடானா.

# தேசிய அரசாங்கத்தால் நாடு பாதுகாக்கப்படமாட்டாது

## ஜே.வி.பி. கூறுகிறது

(கொழும்பு)

**சனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தைகளில் எமக்கு நம்பிக்கை இல்லை. அவ்வாறு அமையப் போகும் தேசிய அரசாங்கத்தால் நாடு பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கையும் இல்லை.**

இவ்வாறு ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் கே.ரி. லால்காந்த கூறியுள்ளார். சுதந்திரக் கட்சி-ஜே.வி.பி. கூட்டமைப்ப' அமைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பாகக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. கூட்டமைப்பு தொடர்பாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் மூலம் நாம் இணக்கப்பாடுகளைக் கண்டுள்ளோம்.

ஆனால், சனாதிபதியின் தேசிய நல்லிணக்க அரசாங்கம் தொடர்பான அறிவித்தலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திவரும் பேச்சுவார்த்தைகளுமே கூட்டமைப்பை அமைப்பதற்கான நடவடிக்கைகளில் கால தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.தே.கட்சியின் தேசிய வளங்களை வெளிநாட்டவர்களுக்கு விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகளையே சனாதிபதியும் மேற்கொள்வார்.

அத்தோடு, சமாதான முன்னெடுப்புக்களைத் தொடர்ந்து கொண்டு செல்வேன் என்று தெரிவித்துள்ளதன் மூலம் ஐ.தே. கட்சியின் நாட்டைப் பிரிக்கும் நடவடிக்கைகளையே சனாதிபதி முன்னெடுப்பார். எனவே தேசிய அரசாங்கம் தொடர்பில் எமக்கு நம்பிக்கையில்லை.

சகல கட்சிகளும் இணைய வேண்டுமெனக் கூறியுள்ளார். நாமும் தயார். ஆனால், மேற்கண்ட கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் கட்சிகளுடன் இணைந்து தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்க நாம் தயாரில்லை.

இலங்கையின் அபிவிருத்திக்கு வெளிநாட்டு முதலீடுகள் தேவை. அதை நாம் மறுக்கவில்லை. ஆனால், தேசிய பொருளாதாரத்தைப் பாதிக்காத வகையில் முதலீடுகள் அமைய வேண்டும்.

இரண்டு கட்சிகளுக்கிடையேயான கூட்டமைப்பைத் தடுப்பதில் சுதந்திரக் கட்சியில் உள்ள சில முதலாளித்துவ உறுப்பினர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலம் இலாபம் பெறுபவர்களும் தடுத்து நிறுத்தி வருகின்றனர்.

அத்துடன் சனாதிபதியின் நிலைப்பாட்டிலும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றனர். என்றாலும், நாட்டுப் பற்றுள்ளவர்களும் சுதந்திரக் கட்சிக்குள் இருக்கத்தான் செய்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



பிரான்ஸ் கடற்படையின் இந்திய கடல் வலயத்திற்குப் பொறுப்பான தளபதி வைஸ் அட்மிரல் நிச்சாட்யீயல் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைச் சந்தித்தபோது.

# சிவப்பு சம்பா அரிசி குறித்து பாவனையாளர் அதிகார சபை எச்சரிக்கை

(கொழும்பு)

சந்தையில் விற்பனை செய்யப்படும் சிவப்புச்சம்பா அரிசி தொடர்பில் பாவனையாளர்கள் விழிப்புடன் இருக்கவேண்டுமென பாவனையாளர் அலுவலர் அதிகார சபை கேட்டுக் கொண்டுள்ளது.

சந்தையில் விற்பனையாகும் ஒரு வகை சிவப்பு அரிசி பற்றி கிடைத்த முறைப்பாட்டையடுத்து இப்பாக முவலிலுல்ல அரிசி ஆராய்ச்சி நிலையத்தில் குறிப்பிட்ட நிற அரிசி பற்றி ஆராய்ந்து வரும் பாவனையாளர் அலுவலர் அதிகார சபை இரசாயனக் கலவை பொன்றினூடாக இவ்வகை அரிசி நிறமாக் கப்பட்டிருப்பதை கண்டறிந்துள்ளதுடன் இது பாவனையாளர்கள் ஆரோக்கியத்துக்கு ஊறு விளைவிக்கக் கூடியது என எச்சரிக்கை விடுத்துள்ளது.

எனவே நிறங்களைக் கொண்ட அரிசியை கொள்வனவு செய்யும் போது பாவனையாளர்கள் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். எனவும் மேற்படி அதிகார சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

# அரசாங்கம் — சனாதிபதி பேச்சில் ஏனைய கட்சிகளும் பங்கேற்க வேண்டும்

## பொ.ஐ. முன்னணியின் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறைக்கும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்திற்கும் இடையிலான உறவுகளை பலப்படுத்துவதற்காக நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் ஏனைய கட்சிகளும் பங்கேற்க வேண்டுமென்பதே சனாதிபதியின் விருப்பமாகுமென பொ.ஐ.முன்னணி தெரிவித்துள்ளது.

இவ்விடயங்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் பிரதிநிதிகள் வெற்றிகரமாக பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்கின்றார் என பொதுசன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களை நிரப்ப அரசாங்கம் நடவடிக்கை

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி வலயங்களில் நிலவும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக் கைகளை மாகாணக் கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் சேவைகால ஆசிரிய ஆலோசகர்களாக நியமிக்கப்படவுள்ளனர் என்று மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி. இராசையா தெரிவித்தார்.

போட்டிப் பரீட்சையில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற ஆசிரியர்களின் விபரங்கள் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் மிக விரைவில் வலயக் கல்வி அலுவலகங்களில் நடை பெறும். வலயக்கல்விப் பணிப்பாளரின் சிபார்சின் அடிப்படையில் பொருத்தமான ஆசிரியாகள் ஆசிரிய ஆலோசகர்களாக நியமிக்கப்படுவர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 24 கல்வி வலயங்கள் தற்போது இயங்கி வருகின்றபோதிலும் 20 வலயங்களுக்கான ஆளணிக்கு மட்டுமே அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட ஆளணிவெற்றிடங்களுக்குஅமைவாகவே புதிய நியமனங்கள்வழங் கப்படவுள்ளன என்று மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் கூறினார்.

# குடாநாட்டு அபிவிருத்தி 50 வருடம் பின்தள்ளியுள்ளது

## யாழ். அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது யாழ். குடாநாடு அபிவிருத்தியில் 50 வருடங்கள் பின்தங்கி உள்ளது என்று யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் தெரிவித்தார்.

கிராம அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சிப் பட்டறையை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய சமயமே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் பணியாற்றும் கிராம அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான இப்பயிற்சிப் பட்டறை கடந்த 22ஆம் திகதி யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. செயலகத் திட்டப் பணிப்பாளர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி நெறியில் அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது.

கிராம அலுவலர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ள சட்டபூர்வமான பல பணிகள் இன்று வழக்கிழந்து செல்கின்ற காரணத்தினால் அவர்களுடைய பணி வறுமை தணிப்பு அபிவிருத்தி புனர்வாழ்வு நடவடிக்கைகளை நோக்கி முன்னெடுத்துச் செல்லபட வேண்டியுள்ளது. இதற்கு ஆரம்பித்துள்ள பயிற்சிப்பட்டறை அவசியமாகும்.

யுத்தத்திற்கு பின்னாலான குடாநாட்டில் புனர்வாழ்வு புனரமைப்பு, மறுசீரமைப்புப் பணிகளில் சகல அரச அதிகாரிகளும் முனைப்புடன் செயலற்ற வேண்டியது அவசியம். அதற்காகவே அடிமட்டத்தில் இருந்து சேவையாற்றுகின்ற கிராம அலுவலர்களின் ஆற்றலை முதலில் மேம்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. அரச சேவைகள் அனைத்தும் மக்களுக்கு இலகுவாகச் சென்றடைய வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றுகின்ற கிராம அலுவலர்கள் ஏனைய இடங்களில் கடமையாற்றுகின்ற கிராம அலுவலர்களிலிருந்தும் வேறுபட்டவர்கள் இந்த இரண்டு மாகாணங்களிலும் வேறுபட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். அபிவிருத்திப் புனர்வாழ்வு தொடர்பான அலுவலர்களாகவும் அவர்கள் கடமையாற்ற வேண்டியுள்ளது.

கிராம மட்டக்குழுவின் செயற்பாடுகளுக்கு உந்து சந்தியாகச் செயற்பட்டு இணைப்பு உத்தியோகத்தர்களாகக் கடமைபுரிய வேண்டியுள்ளது. அதிகாரம் மக்களுக்குத்தான் இருக்கின்றது என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும் என்றார்.

முதலாம் கட்டப் பயிற்சி நெறியில் 60 கிராம அலுவலர்கள் பங்கு கொண்டனர். இரண்டாம் நாள் முடிவில் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட கிராம அலுவலர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# முகாமைத்துவம் பற்றி பொ.ஐ.மு. பேசுவது கேலிக்குரியது

## அமைச்சர் லொக்கு பண்டார

(கொழும்பு)

அரச ஊழியருக்கான சம்பளத்தை சுமார் இரண்டாயிரம் ரூபாவாக அதிகரிக்க அரசு முன்னர் திட்டமிட்டிருந்ததாகவும், சனாதிபதி மூன்று அமைச்சுக்களையும் தம் வசப்படுத்தி அரசியல் ஸ்திரத் தன்மையை சீர் குலைத்ததால் குறிப்பிட்ட அதிகரிப்பு செய்ய முடியாதுவிட்டதாக அமைச்சர் லொக்கு பண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஒன்றை நடத்துவே சனாதிபதி முயற்சிக்கின்றார் என்று கூறிய அவர் அவ்வாறு தேர்தல் நடைபெறுமாயின் தமது ஐ.தே. முன்னணி தயாராகவே இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

1999ஆம் ஆண்டில் மட்டும் 31 குறை நிரப்புப் பிரேரணைகளை சமர்ப்பித்த பொ. ஐ. மு. அரசு தற்போது முகாமைத்துவம் பற்றி பேசுவது கேலிக்குரியதாகிறது என்று கூறினார் லொக்கு பண்டார.

# யாழ். மத். கல்லூரி நிர்வாகத்திற்கெதிராக ம.உ. ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி நிர்வாகத்திற்கெதிராக பல்வேறு முறைப்பாடுகள் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவிடம் சமர்பிக்கப்பட்டிருப்பதாக ஆணைக்குழுவின் யாழ். மனித உரிமை ஆணைக்குழு இணைப்பாளர் சந்திரசேகரா தெரிவித்துள்ளார்

இந்தக் கல்லூரி ஆசிரியர்களாலும், மாணவர்களாலுமே மேற்படி முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்குசம்பளநிலுவை, இடமாற்றம் என்பனவற்றில் நிர்வாகம் அசட்டை செய்து வருவதாகவும் ஆசிரியர்களும் மாணவர்களும் திட்டமிட்டு பழிவாங்கப்படுவதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாணவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை என்ற பெயரில் தாக்கப்படுவதால் அவர்கள் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளும் இதற்கு உடந்தையாக இருப்பதாக ஆசிரியர்கள் கவலை கொண்டுள்ளனர்.

கல்லூரி நிர்வாகத்துடன் உயர் மட்டங்களில் பேச்சுக்கள் நடத்தப்பட்டும் எந்தவித பலனும் கிடைக்கவில்லை எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சந்திர சேகரா தெரிவித்துள்ளார்.

# ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுத் திட்டம்

ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுத்திட்டம் வெளியாகியுள்ளது.

ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறவுள்ளனர் என்று கல்வியமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3தரம் 1இலுள்ள பயிற்றப்பட்ட பயிற்சி டிப்ளோமா தொழிற்றகைமையற்ற பட்டதாரி ஆசிரியர்கள் 05புள்ளிகளைப் பெற்றிருப்பின் அவர்கள் இ.ஆ.சே.வகுப்பு 2தரம் 2ற்குள் உள்ளீர்க்கப்படுவர்.

இ.ஆ.சே வகுப்பு 2 தரம் 2இலுள்ள ஆசிரியர்கள் 5புள்ளிகளைப் பெற்றுப் பின்னர் பிரமாணக் குறிப்பின் ஏனைய பகுதிகளை தொழில் மீளாய்வு சேவைக்காலப் பயிற்சி மற்றும் வினைத்திறன் பரீட்சை ஆகியவற்றைக் கட்டாய பூர்த்தி செய்தால் வகுப்பு 1ற்கு உள்ளீர்க்கப் படுவர். முன்பிருந்த 50 வயதெல்லை என்ற வரையறை புதிய திட்டத்தில் நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. ஆனால் பரீட்சையில் சித்தியும் 20 புள்ளிகளும் தேவை. முதுமாணிபட்டதாரிகளுக்கு வினைத்திறன் காண் பரீட்சை அவசியமில்லை. ஆனால் 20 புள்ளிகள் தேவை 31.12.03 இற்குள் 2004முதல் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

# ஹெரோயின் பிடிபட்டது

கொழும்பிலிருந்து கதிர்காமம் சென்ற சொகுசு பஸ் வண்டி ஒன்றை சோதனையிட்ட பொலிசார் அதில் பயணம் செய்த இரு வர்த்தகர்களிடமிருந்து 400 மைக்கிறுக்கள் ஹெரோயின் போதைவஸ்தைக் கைப்பற்றி யுள்ளனர்.

குடாவெல்ல சோதனைச்சாவடியில் வைத்து கடந்த திங்கட்கிழமை இந்த பஸ்ஸைப் பொலிசார் சோதனையிட்டனர்.

இவற்றின் பெறுமதி 40 ஆயிரம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்விருவரும் தங்காலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## சர்வதேச மனித உரிமைகள் தினமான டிச.10 இல்

# காணாமல்போனோரது பாதுகாவலர்கள்

# யாழ்., கொழும்பில் மறியல் போருக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

**சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10ஆம் திகதியன்று வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போனோர் பாதுகாவலர் சங்கமும், கொழும்பிலுள்ள காணாமல்போனோர் சங்கமும் இணைந்து ஏக காலத்தில் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் மறியல் போராட்டங்களை நடாத்தத் தீர்மானித்துள்ளன.**

இது தொடர்பாக வடபகுதியில் இயங்கும் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் செயலாளரான எஸ். சற்குணம் தெரிவிக்கையில்,.

1996-1997 காலப் பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போனவர்கள் தொடர்பாக இதுவரை எவ்விதமான ஆக்கபூர்வ பதில் கிடைக்கவில்லை என்பதையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட விசாரணை அறிக்கை திருப்தியற்றதாக உள்ளதையும் கண்டித்தே கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகம் முன்பாகவும், யாழ்ப்பாணம் மனித உரிமைகள் அலுவலகம் முன்பாகவும் இந்த மறியல் போராட்டத்தை நடத்தவுள்ளதாக கூறியுள்ளார்.

இவ் மறியல் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கறுப்புப் பட்டி அணிந்து படையினரால் இழைக்கப்பட்ட கொடுமைகளை எடுத்தியம்பும் சுலோக அட்டைகளையும் தாங்கி இருப்பர் என அவர் மேலும் கூறியுள்ளார்.

## உலக வங்கிக்குழு வருகிறது

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தத்தினால் சேதமடைந்த வீடுகள் மற்றும் கட்டடங்களை மீளமைக்கும் செயற்பாடுகள் குறித்து ஆராய உலகவங்கிக் குழுவொன்று, எதிர்வரும் சனவரி 19 ஆம் திகதி சிறிலங்காவுக்கு வருகை தரவிருக்கிறது.

உலக வங்கியின் சிறிலங்காவுக்கான பிரதிநிதி பீற்றர் ஹெறோல்ட் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

## நினைவுத் தூபி புனரமைப்பு

(ஒட்டுசுட்டான்)

1990 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட எட்டு மாவீரர்களினதும் நினைவுத்தூபி ஒட்டு சுட்டான் வன்னியன் தொழிலகத்தினரால் மீள புனரமைக்கப்பட்டுள்ளது.

புனரமைக்கப்பட்ட தூபியின் அஞ்சலி நிகழ்வு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளர் வே.தயாபரன் தலைமையில் நடைபெற்றது.

கடந்த புதன்கிழமை இடம் பெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை ஒட்டுசுட்டான் வலயப் பொறுப்பாளர் தாரகா ஏற்றி வைக்க தேசியக் கொடியினை கிழக்குப் பகுதி கட்டளைத் தளபதி அருண்மொழி ஏற்றினார். ஓயாத அலை மூன்றின் வெற்றி நினைவுக்கல்லிற்கு ஊரக வளர்ச்சித் திட்டப் பொறுப்பாளர் அன்பரசன் மலர் மாலையினை அணிவித்ததைத் தொடர்ந்து எட்டு மாவீரர்களினதும் திருவுருவப் படங்களிற்கு பெற்றோர், சகோதரர், போராளிகள் ஆகியோர் ஈகச்சுடரினை ஏற்றிவைத்து மலர் மாலையினை அணிவித்தனர்.

சிறப்புரையினை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் வழங்கினார்.(05)

# இலங்கையின் நிதித்துறை வளர்ச்சிக்கு அரசியல் இணக்கப்பாடுகள் அவசியம்

### அமைச்சர் ஜீ.எல். பீரிஸ்

(கொழும்பு)

இலங்கையின் நிதித்துறை வளர்ச்சிக்கு தனியார், பொதுத்துறை அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பும், அரசியல் இணக்கப்பாடும் அவசியம் என ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜேர்மன் கூட்டு முயற்சியிலமைந்த நிறுவனத்தின் விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றிறுகையில் அவர் கூறியிருப்பதாவது, சிறிய நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கு வங்கிகள் கடன் வழங்கும்போது பாரபட்சம் காட்டக்கூடாது எனவும் கடன்களைத் தாராளமாக வழங்கினால் அவர்கள் இலகுவில் முதலீடுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருக்கும் எனவும் தெரிவித்தார். இவ்வகை கைத்தொழிலாளர்கள் சந்தைப்படுத்தலில் தீவிர பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் இவர்களுக்குப் போதிய முகாமைத்து உத்திகள் பற்றி போதிக்க வேண்டும் எனவும் கூறினார். தற்போதைய வரவு-செலவுத் திட்டத்தில் சிறிய நடுத்தர கைத்தொழில துறை அரசு 35 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகக் கூறிய அவர் அதனை மேம்படுத்த அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்கும் எனக் கூறினார். CEFE என்பது ஜேர்மனின் GTZ நிறுவனத்தின் உலகலாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு பிரபல கைத்தொழில் தொழில்நுட்ப பயிற்சித் திட்டமாகும் இதன்போது மதுகாப்புடன் கூடிய பயிற்சிகளை வழங்குவதே இதன் நோக்கம் என GTZ நிறுவன இலங் கைக்கான பணிப்பாளர் றொலண்ட் ஸ்டியோ என்பவர் தெரிவித்துள்ளார்.

கொள்கை விரிவாக்கம், திட்டமிடல் அமைச்சின் மேலதிக செயலர் ரகுபத்தா கூறும்போது, கடந்த ஆறு வருட காலத்தில் இதற்கென 10 ஆயிரத்திற்கும் மேறபட்டோர் பயிற்றுவிக்கப்பட்டதாகவும், நுண் நிதித்துறை வளர்ச்சிக்கு அரச தனியார் துறையுடன் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் கூட்டு முயற்சி அவசியம் எனத் தெரிவித்தார்.

CEFE நிறுவனத்தை இலங்கையில் 18 முகவர் நிலையங்கள் வழங்கியிருப்பதாகவும், இன்று வரை 155 பேர் சான்றிதழ்களைப் பெற்றுள்ளதாகவும் வியாபார கற்கை நெறிகள், விவசாய தொழில் முனைவோர் கற்கை நெறிகள் எனப் பல விதமான கற்கை நெறிகள் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு 80 % வளர்ச்சி கண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# 100 பயனாளிகளுக்கு சுழற்சி முறையில் கடன்

(முள்ளியவளை)

முல்லைப் பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினால் கடந்த மாதம் கரைதுறைப்பற்று பகுதிக்குட்பட்ட 100 பயனாளிகளுக்கு வியாபார சுழற்சிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனத்தினால் கரைதுறைப்பற்றுப் பகுதிக்குட்பட்ட முள்ளியவளை குமுழமுனை, வற்றாப்பளை, கேப்பாபிலவு, தண்ணீரூற்று, குமாரபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள 100 பயனாளிகளுக்கு தலா 40 ஆயிரம் ரூபா வீதம் வியாபா சுழற்சிக் கடன் வழங்கப்பட்டுள்ளதாக மேற்படி நிறுவனத்தின் நிர்வாக அலுவலர் சி. கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஆ)

# மாவீரர் தினத்தையொட்டி மட்டக்களப்பில் ஆசிரியர் கலாசாலை மாணவர் இரத்ததானம்

மாவீரர் தினத்தையொட்டி மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையின் ஆசிரிய மாணவர்கள் கடந்த செவ்வாயன்று இரத்ததானம் வழங்கியுள்ளனர்.

கலாசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் கலாசாலை அதிபர் விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சுமார் 50 ஆசிரிய மாணவர்கள் இரத்த தானம் செய்துள்ளனர்.

இந்நிகழ்வில் மட்டு-அம்பாறை மாவட்ட விடுதலைப்புலிகளின் அரசியற்துறை மகளிர்ப்பிரிவுப் பொறுப்பாளர் காயா, கலை பண்பாட்டுக் கழகத் துணைப்பொறுப்பாளர் நந்தினி, மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பொறுப்பாளர் வைத்தியக் கலாநிதி செல்வி, முனசிங்க, கலாசாலைப் பிரதி அதிபர் லட்சுமி-சுந்தரம் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய செல்வி காயா தெரிவிக்கையில் வீழ்ந்தவர்களெல்லாம் விதையாகிப் போனதால் தான் விடுதலைப்பயணம் இன்றும் தொடர்வதான கூற்றுக்கு இணங்க மண்மீட்புக்கு வித்தாகிப்போன மாவீரர்நாள் அனுஷ்டிக்கப்படுவதாகக் கூறினார்.

1989ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த அனுட்டானம் இன்று ஈழத்தில் மட்டுமன்றி புலம் பெயர்ந்த நாடுகளிலும் கூட ஈழத்தமிழர்களால் கொண்டாடப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

''உன்னத தியாகத்தை நினைவு கூரும் இந் நன்னாளில் சமூகத்தின் வழிகாட்டிகளான ஆசிரியர்கள் தமது குருதியை ஈகம் செய்யமுன்வந்தது பாராட்டுக் குரியதாகும்.வருடந்தோறும் இரத்த தானம் செய்யும் நிகழ்வை ஏற்பாடு செய்த ஆசிரியர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். இதேபோன்று மேலும் பலர் முன்வர வேண்டும். இது ஒரு ஊக்கமளிப்புச் செயலாகும். இன்றைய சூழலுக்கு வித்திட்டவர்கள் மாவீரர்களே. எனவே அவர்களை நினைவு கூரும் இந் நாளில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் கரங்களைப் பலப்படுத்துவதாக அமைய வேண்டும்'' என்றார். அரசியல் துறை மகளிர்ப்பிரிவு பொறுப்பாளர் செல்வி காயா.

தொடர்ந்து உரையாற்றிய செல்வி முனசிங்க கூறியதாவது இரத்ததானம் செய்ய முன்வந்த ஆசிரியர்களைத் தாம் மதிப்பதாகவும், பாராட்டுவதாகவும் தெரிவித்ததோடு மாவட்ட வைத்தியசாலையில் அடிக்கடி இரத்தப் பற்றாக்குறை நிலவுவதையும் சுட்டிக்காட்டினார்.

# பிரதமரின் கையைக் கட்டிவிட்டு தே.அரசு அமைக்க அழைப்பது நியாயமல்ல

### அமைச்சர் மகிந்த விஜேசேகர

(கொழும்பு)

பிரதமரின் கைகளைக் கட்டிவிட்டு தேசிய அரசாங்கம் அமைக்க அழைப்பது நியாயமானதல்ல என அமைச்சர் மகிந்த விஜேசேகர சபையில் தெரிவித்துள்ளார்.

அதிகாரப்பரவலாக்கலை எதிர்க்கும் ஜே.வி.பியுடன் பொ.ஐ.மு. கூட்டணி அமைப்பது ஒரு போதும் சாத்தியமாகாதென தெரிவித்துள்ள அவர் அற்புதங்களை நிகழ்த்தி விட இந்த வரவு- செலவு திட்டம் அலாவுதீனின் அற்புத விளக்கல்ல.

அத்துடன் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் ஒரே ஒரு நோக்கத்திற்காக சனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவை மக்கள் வெற்றி பெறச் செய்தனர். ஆனால் அவர்மக்களை ஏமாற்றினார். தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற மறுத்தால் இந் நிலைமையில் பொ.ஐ.முன்னணியின் அரசாங்கத்தின் கடந்த கால தவறுகளை சரி செய்து நாட்டில் ஸ்திரநிலைமையை ஏற்படுத்தியுள்ளோம். இது தவறான செயலா என எதிர் கட்சியினரைக் கேட்க விரும்புகிறேன் என்றார் அவர். மேலும் தெரிவிக்கையில்.

நாட்டில் மக்கள் பெரும் இன்னல்களை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றனர் என்பது உண்மைதான். ஆனால் இந்த இரண்டு வருடங்களில் எல்லா அற்புதங்களையும் நிகழ்த்திவிட முடியாது. இந்த வரவு- செலவுத் திட்டத்தில் மீனவர்களுக்கு எவ்வித நிவாரணங்களும் இல்லை. ஆனால் மீனவர்களின் கடன்களை நீக்கவும் பல நிவாரணங்களையும் வழங்குவதாக நிதி அமைச்சர் உறுதியளித்துள்ளார். நாட்டில் ஒற்றுமை ஒருமைப்பாடு ஸ்திரத்தன்மை இல்லாவிட்டால் திடமான பொருளாதார அபிவிருத்தி ஒரு போதும் ஏற்பட மாட்டாதென அவர் மேலும் கூறியுள்ளார்.

### சடலம் எடுத்துவரப்படும்

மொஸ்கோவிலுள்ள ஓழும்பா பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் இருந்து தப்புவதற்காக 3வது மாடியிலிருந்து கீழே குதித்து அதனால் உயிரிழந்த சிறிலங்கா மாணவியான இரேஷா தில்ஹானி (19) என்பவரின் சடலத்தை சிறிலங்காவுக்கு, எடுத்துவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ரஷ்யாவுக்கான சிறிலங்கா தூதுவர் யு.பி. விஜேகோன் தெரிவித்துள்ளார்.

# முன்பள்ளி மேம்பாட்டு நிலைய 20 நாள் வதிவிடப் பயிற்சி

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தினதும், போருட் நிறுவனத்தினதும் நிதியுதவியுடன் வடக்குக் கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் முன்னெடுத்துச் செல்லும் 20 நாள் வதிவிடப் பயிற்சியின் முதற்கட்டம் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் எஸ்.சிவநாதன் தலைமையில் கிளிநொச்சி வெண்புறா பயிற்சி மண்டபத்தில் கடந்த 18.11.2003 அன்று பி.ப. 4.30 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பெற்றது.

நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை த.பு.க. துணைப் பொறுப்பாளர் எஸ். இனியவனும் தமிழர் புனர் வாழ்வுக் கழகக் கொடியினை கழக திட்டமிடல் பணிப்பாளர் லோரன்ஸ் கிரிஸ்ரியும் ஏற்றி வைத்தனர். முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையக் கொடியினை துணுக்காய் கல்வி வலய முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் செல்வி.கு கிருபாறஞ்சினி ஏற்றிவைத்தார்.

கியூடெக் நிறுவன பிரதிநிதி வணபிதா ஆனந்தகுமார் ஆசியுரை வழங்கினார் சிறப்புரையினை போருட் நிறுவன பிரதிநிதி திருமதி சீரன் தபுக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.இனியவன், திட்டமிடல் பணிப்பாளர் லோரன்ஸ் கிரிஸ்டி கிளி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பொன் தில்லைநாதன் கியூடெக் நிறுவன பிரதிநிதி கணேசபிள்ளை ஆகியோர் வழங்கின. (சோ)



## சிந்தனைக்கு

தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம்; தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 29-11-2003

## விட்டுக்கொடுப்பும் உறுதிப்பாடும்!

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் நேற்று முன்தினம் ஆற்றிய மாவீரர் நாள் உரையில், ஒரு புறத்தில் சமாதானத்தின் மீது விடுதலைப்புலிகள் இயக்கம் கொண்டுள்ள பற்றுறுதியையும், சமாதான முயற்சிகள் தொடர்பாக அது மேற்கொண்டுள்ள முன்முயற்சிகள், விட்டுக்கொடுப்புக்கள் என்பன பற்றியும், மறுபுறத்தில் தமிழ் மக்களுக்கான தமது கடப்பாடு பற்றியும், அதில் தாம் கொண்டுள்ள உறுதி பற்றியும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

"எமது இயக்கமும் சரி, மக்களும் சரி போரை விரும்பவில்லை. வன்முறைப்பாதையை விரும்பவில்லை. நாம் சமாதானத்தையே விரும்புகிறோம். சமாதானவழியில் எமது பிரச்சினைக்குத் தீர்வு காண்பதையே விரும்புகிறோம். சமாதான வழிமுறையில் நாம் ஆழமான நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டிருக்கிறோம்." எனத் தெரிவித்துள்ள தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் சமாதான முயற்சிகளுக்காக, கடந்த இரண்டுவருடங்களாக ஆயுதப் படைத்தரப்பினரின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளையும் தாம் பொறுத்துக்கொண்டு அமைதிகாத்து வருவதனையும் சுட்டிக்காட்டியுள்ளார். இதற்குத் தமது இரண்டு பெரிய வர்த்தகக்கப்பல்கள் சர்வதேச கடற்பரப்பில் வைத்து சிறிலங்காக்கடற்படையால் மூழ்கடிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகள் மீது சுமத்திவரும் குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுத்துள்ள தலைவர் பிரபாகரன் அவர்கள், சிறிலங்கா ஆட்சியாளர்கள் காலத்திற்குக் காலம் மாறி மாறி சமாதான முயற்சிகளுக்கு மாறான வகையில் செயற்பட்டு வந்துள்ளமையையும் சுட்டிக் காட்டியுள்ளார். "இலங்கையில் மாறி மாறி ஆட்சிபீடம் ஏறும் இருபெரும் சிங்கள அரசியற் கட்சிகளுமே தமிழர்களுக்கு விரோதமான இந்த விபரீத நாடகத்தின் இயக்குனர்கள். இந்த இனவாத நாடகத்தின் கதாநாயகர்கள் காலத்திற்குக்காலம் மாறியபோதும் கதையின் கருப்பொருள் மாறவேயில்லை" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகையதொரு நிலையிலும் விடுதலைப்புலிகள் இயக்கம் பொறுமை காப்பதும், யுத்தநிறுத்த உடன்பாட்டினை மதித்து நடப்பதுமானது சமாதான முயற்சிகள் மீது அவர்கள் காட்டும் அக்கறையின் பாற்பட்டதேயாகும். ஆனால் சமாதான முயற்சிகள் புலிகள் இவ்வாறாக அக்கறையை வெளிப்படுத்தி வரினும், சிறிலங்கா அரசும், அதன் ஆயுதப்படையும் இவ்விடயத்தில் ஒரேவகையான நிலைப்பாட்டையோ, ஆதரவான செயற்பாட்டையோ கொண்டதாக இல்லை.

அதிலும் குறிப்பாக, யுத்தநிறுத்த உடன்பாடு தமிழ் மக்கள் தரப்பில் பயனளிப்பதாக இருக்கவில்லை என்பதையும் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். "போர்நிறுத்தத்தால் தமிழர் தாயகத்தில் முழுமையான அமைதிநிலை ஏற்படவில்லை. இயல்புநிலையும் திரும்பவில்லை. அந்நிய இராணுவ ஆக்கிரமிப்பிற்கு ஆளான அவல வாழ்க்கையே தொடர்கின்றது." எனத் தெரிவித்துள்ள தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் "போர்நிறுத்தத்தின் ஆக்கபூர்வமான பயன்களை சிங்கள தேசமே அனுபவித்துவருகின்றது. ஆனால், தமிழர்களின் அவல நிலை தொடர்கின்றது." எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வகையில் சமாதான முயற்சிகளுக்குத் தாம் வழங்கி வரும் ஒத்துழைப்பையும், ஆனால் தமிழ் மக்களின் இன்னல்கள், இடர்கள் தீர்க்கப்படாமை குறித்தும் சுட்டிக் காட்டியுள்ள தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள், தமிழ் மக்கள் தொடர்பான கடப்பாட்டையும் வலியுறுத்திக்கூறத் தவறவில்லை. அதாவது தமிழ் மக்கள் அவசரமாகவும், மனிதாபிமான ரீதியிலும் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு காணப்படவேண்டிய அவசியத்தையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

அதாவது, இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வுஒன்று காண்பது உடனடியாகச் சாத்தியப்படமாட்டாது என்ற நிலையில் மக்கள் எதிர்நோக்கும் வாழ்க்கைப்பிரச்சினை, மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்புப் போன்ற சிக்கலான, பாரிய பிரச்சினைகளுக்குத்தீர்வு காணும் நோக்கிலேயே வடக்கு-கிழக்கில் ஓர் இடைக்கால அதிகார சபை குறித்து கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகத் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆனால், தற்பொழுது இவ் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான சர்ச்சையானது சனாதிபதி சந்திரிகா மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்கும் அளவிற்கு நெருக்கடியை உருவாக்கியுள்ளது. சனாதிபதி சந்திரிகாவின் இத்தகைய நடவடிக்கையானது சமாதான முயற்சிகளுக்குக் குந்தகமானதாக அமைந்திருப்பதை அண்மைய நிகழ்வுகளே வெளிப்படுத்துபவையாக உள்ளன.

இத்தகையதொரு நிலையில் தான் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் சிங்களக் கட்சிகளுக்குத் தெளிவானதொரு அறிவிப்பைச் செய்துள்ளார். "எமது மக்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின்கீழ் நாம் பிரிந்துசென்று தனியரசைக் கட்டியெழுப்புவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இப்படியான இறுதி மார்க்கத்திற்கு தமிழர்களைத் தள்ளிவிடும் புறநிலையை உருவாக்கவேண்டாம்" என சிங்கள அரசியல் தலைமைகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தவகையில் தலைவர் பிரபாகரன் அவர்கள், தமிழ் மக்களின் உரிமை குறித்த விடயத்தில் எவருக்கும் பணிந்தோ, அன்றி விட்டுக்கொடுப்புச் செய்யவோ வேண்டிய தேவையில்லை. "இலட்சியத்தால் ஒன்றுபட்ட மக்களை எந்தவொரு சக்தியாலும் அசைத்துவிட முடியாது." என்ற தலைவர் பிரபாகரனின் கூற்றுக்கள், அவா தமிழர்மீது பிரயோகிக்கப்படும் எத்தகைய அழுத்தத்திற்கும் முகம்கொடுப்பதற்குத் தயாராக இருப்பதோடு, தனிநாடு ஒன்றை அமைப்பது சாத்தியப்பாடானதொன்று என்பதையும் தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்படாதவிடத்து சுதந்திரமான தனியரசு என்ற நிலைப்பாடு விட்டுக்கொடுப்பிற்குரியதொன்றல்ல என்பதையும் உணர்த்தியுள்ளார்.

# விமான எதிர்ப்பு ஏவுகணை இருந்திருந்தால் கிறிஸ்பெட்டனின் ஹெலியை சுட்டிருப்போம்

## சிஹல உறுமய தலைவர் இவ்வாறு தெரிவிக்கிறார்

எம்மிடம் விமான எதிர்ப்பு ஏவுகணை இருந்திருந்தால் புலிகளின் தலைவரை சந்திப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் கிளிநொச்சி சென்ற ஹெலி கொபடரை சுட்டு வீழ்த்தியிருப்போம்.

இப்படி தெரிவித்திருக்கிறார் சிஹல உறுமய கட்சித் தலைவர் திலக் கருணாரட்ண. அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

அரசுக்கு வடக்கு-கிழக்கு மக்கள் வரி செலுத்தவில்லை, தெற்கு மக்களே வரி செலுத்துகிறார்கள் தெற்கு மக்களின் வரிப்பணத்திலேயே கிறிஸ்பெட்டன் கிளிநொச்சிக்கு சென்றிருக்கிறார். இது ஒரு துரோகச் செயல் இதனை நாம் கண்டிக்கின்றோம்.

பாதுகாப்பு அமைச்சை சனாதிபதி பொறுப்பேற்ற பின்னரும் கூட சர்ச்சைக்குரிய மணிராசகுளம் முகாம் அகப்படவில்லை. இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு நாம் சனாதிபதியிடம் முறையிட்டுள்ளோம்.

விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா ஆயுதப்படைகளின் தளபதி பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

நாட்டுப்பற்று இல்லாதவர்களைக் கொண்ட தேசிய அரசு ஒரு போதும் வெற்றியளிக்கப் போவதில்லை. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் நாட்டுப் பற்றுள்ளவர்களா? அவர்கள் பணத்துக்காக எதையும் செய்யக்கூடியவர்கள். இப்படியானவர்களை இணைத்து வைத்திருப்பது அபாயகரமான நிலையையே உருவாக்கும்.

இப்படியானவர்கள் இணைவதால் நாட்டின் பிரச்சினை தீரும் என்று எப்படி நம்புவது.இப்படி அவர் கேள்வி எழுப்புகின்றார்.

# மரபணு ஆராய்ச்சியில் ஏற்பட்ட புரட்சி மனிதனுக்கு ஆபத்தை ஏற்படுத்த வல்லது

## அமெ.விஞ்ஞானிகள் சங்கம் எச்சரிக்கை

மரபணு ஆராய்ச்சியில் ஏற்பட்டுள்ள புரட்சி "இருண்ட உயிரியல் ஆயுத எதிர் காலம்" ஒன்றை உருவாக்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மனிதன் இதுவரை கண்டறிந்திடாத நோய்த்தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நுண்ணங்கிகள உருவாக்கப்பட்டு அவை உயிரியல் அயுதங்களில் பயன்படுத்தப்படும் போது அதனால் ஏற்படக் கூடிய விளைவை கற்பனை செய்தும் பார்க்கமுடியாது என்றும் நிபுணர் குழு ஒன்று அறிவுறுத்துகிறது. இருண்ட உயிரியல் ஆயுத எதிர்காலம் எனும் தலைப்பில் அமெரிக்க விஞ்ஞானிகளின் சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்று இவ்வாறு கூறுகிறது.

மரபணு அறிவியலில் ஏற்பட்டுள்ள புரட்சி நவீன சிகிச்சை முறைகள் கண்டு பிடிக்கப்படுவதற்கு வழி வகுக்கும் அதே வேளை மனித குலத்துக்கு பேராபத்தை ஏற்படுத்தக் கூடிய நுண்ணங்கிகள் கண்டு பிடிக்கப்படுவதற்கும் பயன்படப்போவதாகவும் இதனால் பயங்கர உயிரியல் ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக மனித உடலுக்கு உடனடியாகவும் நீண்ட கால ரீதியிலும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய வைரஸ கிருமிகள் உருவாக்கப்படலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# அரசியல் தலைவர்களுக்கு சரியான வழியை நாட்டு மக்களே தெரிவிக்க வேண்டும்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

தற்போதைய அரசியல் தலைவர்களின் சரியான அரசியல் பாதையை மக்களே அழுத்தம் கொடுத்துத் தெரிவிக்க வேண்டுமென விமல்வீரவன்ச கூறியுள்ளார்.

கம்பஹாவில் இடம்பெற்ற தேசநலன் விரும்பிகளின் அமைப்பு ஏற்பாடு செய்த கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் யானைக்கும், புலிகளுக்குமிடையேயான ஒப்பந்தம் தற்போது நடைமுறையில் உள்ளது. இவ் இணக்கப்பாட்டில் முக்கியமான இலக்கு வட-கிழக்கை 2005ஆம் ஆண்டு வரை புலிகளுக்கு இனாமாக வழங்குவதாகும். புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகப் பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் மக்களுக்கு விளக்க வேண்டுமென அவர் மேலும் கூறியுள்ளார்.

# சிறி — இங்கிலாந்து டெஸ்ட் தொடர் முதல் டெஸ்டிற்கான சிறி.அணி அறிவிப்பு

சிறிலங்கா-இங்கிலாந்து கிரிகெட் அணிகளுக்கிடையே எதிர்வரும் இரண்டாம் திகதி காலியில் நடைபெறவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டிக்கான 15 பேர் கொண்ட சிறிலங்காவின் அணியின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அணியில் 9 துடுப்பாட்ட வீரர்களும், மூன்று வேகப்பந்து வீச்சாளர்களும், மூன்று சுழற் பந்து வீச்சாளர்களும் அணியில் இடம் பெற்றுள்ளனர். இவர்களுள் வேகப் பந்து வீச்சாளரான திலுஷ பெர்னாண்டோவுக்கு இது கன்னிப் போட்டியாகும். அணியில் இடம் பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட "A" அணித் தலைவர் ரஸல் ஆர்னோல்ட் அணியில் சேர்க்கப்படாமை குறிப்பிடத்தக்கது.

காலி மைதானம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானது என்பதால் முரளிதரனுடன் குமார் தர்மசேனா,உப்புள் சந்தன என்போர் இணைக்கப்பட்டுள்ளனர். சமிந்த வாஸ் தலைமையில் தில்ஹார பெர்னாண்டோ, திலுஷ பெர்னாண்டோ ஆகிய வேகப்பந்து வீச்சாளர்களும் அணியில் இடம் பெறுகின்றனர்.

திலுஷ பெர்னாண்டோ தம்புள்ளையில் நடைபெற்ற ஒரு நாள் போட்டியில் சிறப்பாக பந்து வீசியதால் இத்தொடரில் இணைக்கப்பட்டுள்ளார்.

அணி விபரம் வருமாறு:-

ஹாசான் திலகரட்ண (தலைவர்)மாவன் அத்தபத்து,சனத் ஜயசூரிய, குமார் சங்கக்கார, மகேல ஜயவர்த்தன, குமார் தர்மசேன, உப்புள் சந்தன, சமிந்தவாஸ், திலுஷ் பெர்னாண்டோ, முத்தையா முரளிதரன், தில்ஹார பெர்னான்டோ, திலகரட்ன தில்ஷான், ரொமேஷ் களுவிதாரன,மைக்கல் வண்டோர்ட்.

# சச்சின் டெண்டுல்கர் இவ்வருடம் சிறந்த வீரராகத் தெரிவு

இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் இவ்வருடத்தின் சிறந்த கிரிகெட் வீரராக கிரிக்கெட் அலுவலர்களின் தெரிவுப் புத்தக வெளியீட்டாளர்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வருடத்தில் சிறந்த அணித் தலைவராக இந்தியாவின் செளரவ் கங்குலி தெரிவாகியுள்ளார்.

கடந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் சிறப்பாக விளையாடியமைக்காக டெண்டுல்கருக்கு சிறந்த வீரருக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரின் டெண்டுல்கர் 11 போட்டிகளில் 673 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. 1998 ஆம் ஆண்டிலும் இவ்விருதை டெண்டுல்கர் வென்றிருந்தார்.

உலகக் கிண்ணத் தொடரில் இந்தியா இறுதிப் போட்டிக்கு தெரிவாகுவதில் பெரும் பங்காற்றியமைக்காக சிறந்த அணித் தலைவருக்கான விருதை செளரவ் கங்குலி வென்றுள்ளார்.

மேற்படி நிறுவனத்தின் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதை ஸ்ரீவ்வோ (1999), செளரவ் கங்குலி (2000), முத்தையா முரளிதரன் (2001), ராகுல் ராவிட் (2002) ஆகியோர் கடந்த வருடங்களில் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# அரசாங்கத்தின் சம்பள உயர்வுத்திட்டம் சந்திரிகாவின் செயலால் தடைப்பட்டது

## நீதியமைச்சர் லொக்கு பண்டார

இரண்டாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்குவதற்கு வரவு செலவுத்திட்டத்தில் தீர்மானம் எடுத்தோம். ஆனால்சனாதிபதி அவர்கள் மூன்று முக்கிய அமைச்சுக்களையும் பொறுப்பேற்றமையால் அந்த சம்பள உயர்வு தடைப்பட்டது என சிறிலங்காவின் நீதி அமைச்சர் லொக்கு பண்டார பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தில் தெரிவித்துள்ளார். சனாதிபதி இந்த அமைச்சுகளை பொறுப்பேற்றது பொதுத் தேர்தல் ஒன்றை கடத்துவதற்காகவே. ஐக்கிய தேசிய முன்னணி எப்பொழுதும் பொதுத் தேர்தலுக்கு முகம் கொடுக்கத் தயாராகவே உள்ளது என அவர் கூறினார்.

1999ஆம் ஆண்டு பொது சன ஐக்கிய முன்னணி அரசு 31 மதிப்பீடுகளை முன் வைத்து திட்டங்களைத் தயாரித்து கள்ள நோட்டுக்கள் அச்சடித்து வெளியிட்டது எனவும் அவர் கூறினார்.

# 1000 தமிழ்மொழி மூல ஆசிரியர் நியமனம் 2ஆம் தவணையில்

## கல்வி அமைச்சு அதிகாரிகள் தெரிவிப்பு

2001ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கென, க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள் மத்தியில் 1000 தமிழ் மொழி மூல ஆசிரிய நியமனம் செய்யப்பட வேண்டுமென சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட நியமனங்கள், பலத்த இழுத்தடிப்பின் பின் நிறைவேற்றப்படவுள்ளது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் மத்தியில் போட்டிப் பரீட்சை நடாத்தி 1000 பேரை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழி மூல ஆசிரியர்களாக நியமிப்பதற்கு, மனிதவள அபிவிருத்தி, கல்வி கலாசார அமைச்சின் செயலாளர் சி.கே.நாணயக்காரா நடவடிக்கைகளை தற்போது பூர்த்தி செய்துள்ளார். இதற்காக வர்த்தமானியில் பிரசுரம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, விளம்பரம் அரச அச்சகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வர்த்தமானியில் வெளியிடுவதில் தாமதம் ஏற்படலாம் என்பதால் தமிழ்த் தினசரிகளில் விளம்பரப்படுத்தும்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்ற அமைச்சுச் செயலாளர், இவ்வார இறுதியில் தமிழ்மொழி மூல தினசரிகளில் வெளியிட ஆவன செய்வதாக தம்மிடம் உறுதியளித்துள்ளார் எனவும், சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதே நேரத்தில் இவ் விளம்பரத்தை, வடக்கு கிழக்கு மாகாண நன்மை கருதி, மாகாணக் கல்வி அமைச்சு தயாரித்து அனுப்பிய போதும், கல்வி அமைச்சும், பொதுச் சேவை ஆணைக்குழுவும் சில மாற்றங்களைச் செய்துள்ளதாகத் தகவல்கள் சங்கத்திற்குக் கிடைத்துள்ளதாகவும், விளம்பரம் வெளிவந்த பின்னர், அதனைப் பார்வையிட்டு, செய்யப்பட்ட மாற்றங்கள் பாதிப்பை ஏற்படுத்தும் என்றால், அவைதொடர்பாக கல்வி அமைச்சுச் செயலாளருடன் கலந்துரையாடித் தேவையான மாற்றங்களைச் செய்யுமாறு சங்கம் கோரும் எனவும், தேவையேற்பட்டால், அரசியல் அழுத்தங்களையும் கொடுக்கச் சங்கம் தயங்காது எனவும் பொதுச் செயலாளரால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 31.12.2003.எனவும் இதற்கான போட்டிப் பரீட்சைகள் ஜனவரி பிற்பகுதியில் நடாத்தப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் சித்தி யெய்தியவர்களுக்கு நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு 2004ஆம் ஆண்டு இரண்டாம் தவணை ஆரம்பமாகும் பொழுது இப்புதிய ஆசிரியர்கள் பதவி ஏற்கக் கூடியதாகவும் இருக்கும் எனவும், அமைச்சு அதிகாரிகள் தம்மிடம் தெரிவித்ததாக சங்கத்தின் பொதுச் செலாளர் தெரிவித்தார். (25)

# எமது பிரச்சினைகளைத் தீர்க்காவிடின் பஸ்கள் அனைத்தையும் எரிப்போம்

## - தனியார் பஸ் உரிமையாளர்கள் தெரிவிப்பு

தமது பிரச்சினைகளை எதிர்வரும் சில தினங்களில் தீர்க்காவிட்டால் தமது பஸ் வண்டிகளை பஸ் நிறுத்தும் இடங்களில் வைத்து தீமூட்டுவோம் என அரசாங்கத்துக்குத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் எச்சரித்துள்ளது. நேற்று முன்தினம் காலி மாவட்டத்திலுள்ள சகல பஸ் உரிமையாளர்களும் கலந்துகொண்ட கூட்டத்தில் அவர்கள் இவ்வாறு எச்சரித்தனர். தமது பிரச்சினை காரணமாக போக்குவரத்திற்காக மக்கள் அதிக சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் என பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## பாதுகாக்க கோரிக்கை

அண்மைக்காலமாகத் தொடர்ச்சியாகப் பெய்துவரும் பெரும் மழை காரணமாக சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயம் காணப்படுகின்றது.

உடைப்பெடுத்தால் விவசாயிகளின் நெற்செய்கை மக்கள் குடியிருப்பு என்பன மிக மோசமாகப் பாதிப்படையும்.

இதனால் அவ்வப்பகுதிக் கமக்கார அமைப்புகள் யாவும் எச்சரிக்கையாக இருந்து குளங்கள் உடைப்பெடுக்காது பாதுகாக்குமாறு முல்லை மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க. தர்மலிங்கம் தெரிவித்தார். (22)

# இலவச கண்சிகிச்சை முகாமில் 74 பேருக்குச் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் நடைபெற்ற இலவச கண்சிகிச்சை முகாமில் 74 பேருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது.

அன்றையதினம் காலை 9.00 மணி முதல் பி.ப.2.00 மணிவரை நடைபெற்ற மேற்படி கண்காணிப்புப் பரிசோதனையின் போது 74 பேருக்கு சிகிச்சை வழங்கப்பெற்றதுடன் சிலருக்கு வைத்திய அறிவுறுத்தல்களும் வழங்கப்பெற்றன.

லண்டனிலிருந்து வருகை தந்து தற்போது 'வவுனியா பொது வைத்தியசாலையில் கடமை புரிந்து வருகின்ற கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியக் கலாநிதி ரூபசிங்கம் அவர்களால் மேற்படி கண்பரிசோதனை மேற்கொள்ளப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# வான்மீது ரயில் மோதியது நான்கு பேர் படுகாயம்

(கொழும்பு)

வாதுவை கொக்குபிட்டிய பகுதியில் புகையிரதம் வான் ஒன்றை மோதியதில் நான்கு பேர் படுகாயமடைந்தனர். இருவரின் நிலை கவலைக்கிடமாகியுள்ளது.

கொழும்பில் இருந்து வாகரை நோக்கிச் சென்று கொண்டிருந்த புகையிரதமே நேற்றைய தினம் வானுடன் மோதுண்டது.

இவ் விபத்தில் திருமண வீட்டிற்கு சென்று விட்டு வானில் வீடுதிரும்பிக்கொண்டிருந்தவர்களே படுகாயமடைந்தவர்களாவர்.

படுகாயமடைந்தவர்கள் நாகொட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்விபத்திற்கு பாதுகாப்பற்ற புகையிரதகடவையே காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்புகையிரதகடவையில் அண்மைக்காலத்தில் பலவிபத்துக்கள் நடைபெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வன்னியில்...

றையினர் மேற்கொண்ட வண்ணமிருந்தனர்.

அத்துடன் இரத்தினபுரம் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வுக்கழகம், கிளிநொச்சிப் பிரதேச அரசியல் துறையினர், இரத்தினபுரம் கிசே.அலுவலர் காண்டீபனின் உதவியுடன் உடனடித் தேவைக்கான உணவுப்பொதிகளை வழங்கினர்.

கிளி.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு மறவன், பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் நிரூபன், கிளி.அ.பு.க. இணைப்பாளர் திரு ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உணவுப்பொதிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மழை பெய்யும் பட்சத்தில் குடமுருட்டி ஆறு பெருக்கெடுக்கும் அபாயம் ஏற்படலாமெனவும் இதன் காரணமாகப் பூநகரிக்கான போக்குவரத்துத் தடைப்பட வாய்ப்பு உண்டாகலாமென அஞ்சப்படுகின்றது.

இதேவேளை மட்டக்களப்பு அம்பாறைப் பகுதியில் கடந்த இருபத்துநான்கு மணித்தியாலங்களாக பெய்த கடும்மழையினால் பெருவெள்ளம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பெரு வெள்ளம் காரணமாக ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன. அம்பாறை காரைதீவு பிரதான வீதியை ஊடறுத்து குறுனி கஞ்சாறு பெருக்கெடுத்து ஓடுகின்றது.

இதேவேளை கல்முனை அக்கரைப்பற்றுப் பிரதேசத்திலும் கடும் மழை பெய்துவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (சோ)

## மார்ச்...

ஆனால் இவற்றில் எதிலும் அவர் அக்கறை கொண்டிருக்கவில்லை. காலத்தை இதில் இழுத்தடித்து, மார்ச்மாதமளவில் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு நடவடிக்கை எடுப்பதே அவரது நோக்கம் என தெரிவிக்கப்படுகிறது. (32)

## சனாதிபதி...

மலிக்சமரவிக்கிரமவும் மனோதித்தவெலவும் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக இன்னும் கலந்துரையாடவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

ஆனால் சமாதான முயற்சிகளை முன்னெடுத்து செல்வதற்கான வாய்ப்புகள் குறித்து இக் குழு ஆராய்ந்து வருகின்றது. இக் குழு எதிர்வரும் வாரத்தில் சனாதிபதிக்கும்,பிரதமருக்கும் தனது அறிக்கையை சமர்ப்பிக்கும் அதன் அடிப்படையில் இப்போதைக்கு மேற்படி இக் குழுவின் அறிக்கையின் படி இலங்கையின் அரசியல் நெருக்கடி தீர்க்கப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (32)

## போர்நிறுத்த...

மிப்பார். மேற்படி நியமிக்கப்படும் உதவி அமைச்சரின் கீழ் தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் போர்நிறுத்த உடன்பாடு வரும். போர்நிறுத்தம் இடம்பெற்றுவரும் அதேவேளை அதற்கான இணைப்புத் திட்டங்களையும் உதவிப் பாதுகாப்பு அமைச்சர் செய்வார். அத்துடன் அவருக்கு உதவி அளிக்க ஒரு குழு நியமிக்கப்படும். இதில் மூன்று பேர் அங்கம் வகிக்கின்றனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், சமாதானச் செயலக செயலாளர், கூட்டுப்படைத் தலைமை யகத்தின் செயலாளர் ஆகி யோரே அவர்கள்.

இதன் அடிப்படையில் மீண்டும் நோர்வேயை பேச்சுவார்த்தை ஏற்பாட்டாளராக அழைப்பதற்கும், இதன் அடிப்படையில் சனவரி முதல் வாரத்தில மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கக்கூடிய நிலைமை இருக்கும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களும் பங்குகொள்ளலாம்.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையில் நேரடித் தலையீட்டைக் கொண்டிருப்பவர் பிரதமர் மட்டும் தான்.

இதுமட்டுமல்லாமல் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழு, சுயாதீன ஊடக ஆணைக்குழு, இலஞ்ச ஊழலுக்கு எதிரான ஆணைக்குழு இந்த நான்கும் பொதுசன ஐக்கிய முன்னணி, ஐ.தே.கட்சி மற்றும் ஏனைய கட்சிகள் கூட்டுச் சேர்ந்து இந்தகூட்டுத் திட்ட அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படித் திட்டம் ஒரு வருடகாலத்துக்கு சனாதிபதி சந்திரிகாவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (32)

## புலிகளை...

மத்தியில் வெற்றியை ஈட்டித்தந்தவர்கள் மாவீரர்கள். வீரம் செறிந்த போராட்டத்தின் மூலம் வியத்தகு சாதனைகளைப்படைத்தவர்கள் மாவீரர்கள். இன்று நாம் அனுபவிக்கும் சமாதானச் சூழல் உருவாகுவதற்குத் தங்களை அர்ப்பணித்தவர்கள் மாவீரர்கள். மாவீரர்களின் தியாகத்தில்தான் இன்றைய சமாதான சூழல் உருவானது. பலமாக இருக்கும் போதுதான் சமாதானம் பற்றிச் சிந்திக்கவேண்டும் பலவீனமான போது போர் தொடுக்கவேண்டும். என்று மேலைநாட்டு அறிஞர் ஒருவர் கூறினார். இன்று பலமான வலிமையுடன் இருக்கின்றோம். சமாதானம் மூலம் உரிமைகளைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றோம். இதைப் பலவீனமாக அரசாங்கம் கருதக்கூடாது'' என்று கூறினார்.

திருமலை மாவட்ட விடுதலைப்புலிகள் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி கருண்யா பேசும்போது, "நாம் நிதானமாக மாவீரர்களின் இலட்சியங்களை, கனவுகளை நெஞ்சிலே நிறுத்தி சமாதானப் பாதையிலே தீர்வு காணுவதற்கு உறுதிபூண்டுள்ளோம் என்றார். இரண்டு வருடகால யுத்தத்த நிறுத்தத்தின்போது, ஏற்றுக் கொள்ளப்பட்டவாறு உடன்படிக்கையில் கூறப்பட்டவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. தமிழர்களுக்குச் சுதந்திரம் வழங்கவேண்டும் .அவர்களின் உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்ற உள்ளச்சுத்தியுடன் சிங்கள அரசாங்கம் சமாதானப்பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்வரவில்லை. விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க முடியாது என்பதை தென்னிலங்கை சிங்கள அரசுகள் நன்றாக உணர்ந்ததினால் தென்னிலங்கை அரசியலாளர்கள் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தமுன்வந்துள்ளார்கள்."என்றும் அவர் கூறினார். (25)

## உடுத்துறை...

வப்படங்கள் வைக்கப்பட்டன. அப்பந்தலில் பொதுச் சுடரினை ஓடிமீன் விளையாட்டு கழக தலைவர் ஏற்றிவைக்க மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு மாவீரர்களின் பெற்றோர் உறவினர்கள் சம நேரத்தில் சுடரினை ஏற்றினர். துணுக்காய் ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பொதுச் சுடரினை மாலதிப்படையணித் தளபதி லெப்.கேணல் தமிழ்ச் செல்வி ஏற்றிவைத்தார். இங்கு மாலதிபடையணி சிறப்புத் தளபதி ஏற்றிவைத்ததாக நேற்று வெளிவந்த செய்தி தவறானதாகும் (24,11)

## கிளி.மாவட்ட...

திற்கான அறைகள் மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவில் இரத்தவங்கி, எக்ஸ் கதிர் அறை உடலியற்கூற்று அறை, சட்ட அதிகாரி பிரிவு, மருந்தகம், பிரேத அறை என்பன அமைக்கப்பெறவுள்ளன.

இவை அனைத்தும் ஒரு தளவைத்தியசாலையின் சேவையை வழங்கக்கூடிய வகையிலேயே அமைக்கப்பெறுவுள்ளதென தெரிவித்துள்ளார். (சோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.